விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 338 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 06 வியாழக்கிழமை (21.11.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## 10ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடர் இன்று ஆரம்பம்

### ஜனாதிபதியும் கொள்கைப் பிரகடன உரை நிகழ்த்துவார்

(கொழும்பு)

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. இன்றைய தினம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவும் தனது கொள்கைப் பிரகடன உரையை நிகழ்த்துவார்.

இன்று காலை 9.55 மணிக்கு வாக்கழைப்பு மணி ஒலிக்கப்பட்டு மு.ப 10.00 மணிக்கு பாராளுமன்ற அமர்வு ஆரம்பிக்கப்படவிருப்பதுடன், செங்கோல் சபா மண்டபத்தில் வைக்கப்பட்டதும், பாராளுமன்றத்தைக் கூட்டும் ஜனாதிபதியின் பிரகடனத்தை பாராளுமன்ற செயலாளர் நாயகம் சபையில் வாசிப்பார்.

முதலாவதாக சபாநாயகரின் தெரிவு இடம்பெறவிருப்பதுடன், அரசியலமைப்பின் 64 (1) பிரிவு மற்றும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 4,5 மற்றும் 6 இன் ஏற்பாடுகளுக்கு அமைய சபாநாயகர் வாக்கெடுப்பின் மூலம் தெரிவுசெய்தல், சபாநாயகரின் பதவிச்சத்தியம் 02

## வடக்கு மக்களின் வாழ்வாதாரத்துக்கு

### சீனா ரூ.12 மில்லியன் நிதியுதவி



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு உதவும் வகையில், சீன அரசாங்கத்தால் 12 மில்லியன் ரூபாய் பெறுமதியான காசோலை வடக்கு மாகாண 15

## மோ.சைக்கிள் விபத்து; இரு இளைஞர்கள் பலி



### மாங்குளத்தில் சம்பவம்

(மாங்குளம்)

மாங்குளம் வெள்ளாங்குளம் பகுதியில் மோட்டார் 15

# மாவீரர் வாரம் இன்று ஆரம்பம்

### தாயகத்திலும் புலத்திலும் அஞ்சலிக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

ஈழத் தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டத்தில் தமது இன்னுயிர்களை ஆகுதியாக்கிய வீரமறவர்களின் தியாகத்தை நினைவுகூரும் மாவீரர் தின நினைவெழுச்சி வாரமானது கார்த்திகை 21ஆம் திகதியான இன்று வியாழக்கிழமை முதல் தாயகத்திலும் புலத்திலும் உணர்வுபூர்வமாக ஆரம்பமாகவுள்ளது. (02ஆம் பக்கம் பார்க்க)



## சுவிட்சர்லாந்தில் விபத்து; யாழ்.இளைஞன் மரணம்

(பேர்ன்)

சுவிட்சர்லாந்து வலே மாநிலத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக் கொண்ட இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வலே மாநிலத்தில் நேற்று முன் 15



## பிரசவத்தில் தாய், சிசு மரணம் மன்னாரில் நீதி கோரி போராட்டம்

### கலகத்தடுப்பு, அதிரடிப்படை பொலிஸார் குவிப்பு

(மன்னார்)

மன்னார் பொது வைத்திய சாலையில் மகப்பேறுக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணமடைந்த தாய் மற்றும் சிசுவின் மரணத் 15



## 70 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்யத் தீர்மானம்

### வர்த்தக அமைச்சர் வசந்த

(கொழும்பு)

சந்தையில் அரிசிக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்க 70ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க 02

## யாழில் அடர் மழையால் 50 பேர் பாதிப்பு



(யாழ்ப்பாணம்)

தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை அனர்த்தம் காரணமாக யாழ்ப்பாணத்தில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 50 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகயாழ்ப்பாண மாவட்ட 15

## ரணில் இந்தியா விஜயம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று இந்தியாவிற்கு விஜயம்மேற்கொள் 15

## பலாலி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மனை 34 வருடங்களின் பின்னர் தினசரி வழிபட அனுமதி



15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி வெற்றிடம்

- **கனினி தமிழ் ரைப்பிங்**
  (உயர்தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)
- **முகாமைத்துவ உதவியாளர்கள்**
  (உயர்தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)
- **பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்**
  (சாதாரண தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)

பொருத்தமானவர்கள் நேரில் அல்லது **076 097 3121** எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். யாழ்ப்பாண நகருக்கு அண்மித்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

191, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

பொது முகாமையாளர்,
வலம்புரி நாளிதழ்.


## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 1935 . 07 . 09

ஆண்டவன் அடியில் 2018 . 11 . 28



**அமரர் திருமதி சங்கநிதி தபானந்தம்**

**மண்டைதீவு -6**

**திதி : கார்த்திகை மாத அபரபக்க ஷஷ்டி**

அன்பொடு அதிகாரமாய் எமை ஆண்ட அன்னையே!
நின் முகம் பார்த்து உன்குரல் கேட்டு
ஆண்டு ஆறு ஆனதம்மா – எம் காவல்
தெய்வமாய் நீ இருக்க கவலை மறந்து வாழ்ந்தோமே!
கடுகதியாய் எமை விட்டு காலனிடம் சென்றாயே!
காசினியில் நின் வடிவில் காவியம் படைத்துவிட்டாய்
கண்ணிறைந்த தெய்வமே! எமை காத்திட
நின் பாதம் வேண்டுகின்றோம் அம்மையே!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

(561)

இல. 15, குளம்கரை லேன்,
கொக்குவில்.

நின் ஆத்ம சாந்தி
வேண்டி நிற்கும் : குடும்பத்தார்



## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்

**கார்த்திகேசு வேலும்மயிலும்**

(ஓய்வுநிலை அதிபர்)

**திதி - அபரபட்ச தேய்பிறை 21.11.2024**

ஆலமரமொன்று அடிசாய்ந்ததோ - வேரோடி
விழுது விட்டபெரு விருட்சமே எமை - பாரோடு
தவிக்கவிட்டு பாதியிலே போனதேனோ
மூன்றாண்டுகள் ஓடி மறைந்தாலும்
உங்கள் உயிர்மூச்சு மறைவதில்லை.
என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம்
குடும்பத் தலைவியும் பிள்ளைகளும்
குடும்ப உறுப்பினர்களும்

புதிய வீதி, வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை. (C-1624)

தகவல் - V.K.ஜெக[illegible]
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் (மகன்)

## மாவீரர்...

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு தனது இன்னுயிரை போராட்டக்களத்தில் ஆகுதியாகிய முதலாவது மாவீரர் சங்கரின் நினைவாக, அவ்ர் உயிரிழந்த கார்த்திகை 27ஆம் திகதி, விடுதலைப்புலிகளின் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் மாவீரர் தினமாக 1987 ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது.

அந்தவகையில் மாவீரர்களின் உயர் தியாகத்தினை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கும் வகையில் இன்று முதல் தமிழர் தாயகத்தில் உள்ள வீரமறவர்கள் விதைக்கப்பட்ட மாவீரர் துயிலுமில்லங்களில் அகவணக்க நினைவேந்தல் நிகழ்வுகளும் வீரமறவர்களின் உறவுகளுக்கான கௌரவிப்பு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

அதற்கு சமாந்தரமாக தாயகத்திலும் தமிழர் புலம்பெயர் தேசங்களிலும் மாவீரர் நினைவெழுச்சி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ம-7)

## அரிசியை...

தெரிவித்தார்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் இந்த அரிசியை இறக்குமதி செய்து உற்சவக்காலத்தில் மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாதிருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அரிசி மாஃபியாக்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து நுகர்வோருக்கும், விவசாயிகளுக்கும் பயனை பெற்றுக்கொடுக்கும் நீண்ட கால தீர்வுகள் அடுத்த பெரும் போகத்துடன் கிடைக்கப்பெறும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

நாட்டில் அரிசிக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு தொடர்பில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதல் அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை அறிவிக்கும் விசேட ஊடகவிலாளர் சந்திப்பு நேற்று புதன்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார். (ம-7)

## 10 வது பாரா...

பாராளுமன்ற உறுப்பினர்களின் சத்தியப்பிரமாணம், பிரதிச் சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித் தவிசாளர் வாக்களிப்பினால் தெரிவு செய்தல் என்பன இடம்பெறும்.

முதலாவது நாளில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆசன ஒதுக்கீடு மேற்கொள்ளப்படாது என்பதால் தமக்கு விரும்பிய ஆசனங்களில் அமர முடியும் என்பது விசேடமானதாகும்.

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் ஆரம்ப நிகழ்வை எளிமையான முறையில் நடத்துமாறு ஜனாதிபதி வழங்கிய பணிப்புரைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும், இதற்கு அமைய ஜயமங்கள கீதம், முப்படையினரின் அணிவகுப்பு, மரியாதை வேட்டுக்கள் தீர்த்தல் மற்றும் வாகனப் பவனி என்பன இடம்பெறாது என படைக்கல சேவிதர் குஷான் ஜயரத்ன தெரிவித்தார்.

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் ஆரம்ப நாள் நிகழ்வில் வெளிநாட்டு இராஜதந்திரிகள், முன்னாள் ஜனாதிபதிகள், முன்னாள் பிரதமர்கள், பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், சட்டமா அதிபர், அமைச்சுக்களின் செயலாளர்கள், முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட விசேட விருந்தினர்கள் கலந்துகொள்ள விருப்பதாகவும் படைக்கல சேவிதர் குஷான் பெர்னாந்து தெரிவித்தார். (ம-7)


உ
சிவசிவ

## "மெய்கண்டார் விருது"

தென்னாடு

### அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கானது

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபை நடாத்தும் "மார்கழிப் பெருவிழாவை" முன்னிட்டு அதியுயர் விருதான "மெய்கண்டார் விருது", தெரிவு செய்யப்பட்ட அறநெறி ஆசிரியர்களுக்கு வழங்கப்படவிருக்கிறது.

அந்தவகையில் "மெய்கண்டார் விருதுக்கு" பிரேரிக்கும் ஆசிரியரை முன்மொழிபவர், உங்கள் மாவட்டத்தில் உள்ள அறநெறிப் பாடசாலை ஆசிரியரின் உன்னத சேவைகளைப் பற்றி மூன்று பக்கங்களுக்கு குறையாமல் எழுதி, ஆசிரியரின் முழுப்பெயர், கைபேசி எண், அறநெறிப் பாடசாலையின் பெயர், கல்வி கற்கும் மாணவர்கள் எண்ணிக்கை, மாவட்டம் மற்றும் முகவரியுடன் முன்மொழிபவர் மற்றும் வழிமொழிபவர் பெயர்கள், கையொப்பம் மற்றும் தொடர்பிலக்கத்துடன் தென்னாட்டு முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் தெரிவாகிய ஆசிரியருக்கு, பெறுமதியான (10,000 ரூபாய்கள்) பணப்பரிசுடன் விருது வழங்கப்படும்.

**உங்கள் முன்மொழிவுகளை எதிர்வரும் கார்த்திகைத் திங்கள் 25ம் நாளிற்கு (10-12-2024) முன்னர் கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும். தெரிவு முடிவுகள் தொடர்பான அனைத்து தீர்மானங் களும் தென்னாடு மடம் சார்ந்ததே.**

திருச்சிற்றம்பலம்

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

அனுப்பவேண்டிய முகவரி:
தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,
தென்னாடு வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
+94 70 770 1111/ 021 222 9722

(C-1627)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை வந்த வாஸ்கொடகாமா

(கொழும்பு)

வாஸ்கொடகாமா என்ற அதி சொகுசு பயணிகள் கப்பல் நேற்றுக் காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.689 பயணிகள் மற்றும் 460 பணியாளர்களுடன் குறித்த கப்பல் இந்தியாவில் இருந்து நாட்டுக்கு வருகை தந்துள்ளது.

இது ஜேர்மனி, பிரிட்டன் மற்றும் இந்தியாவிலிருந்து கொழும்பு, காலி மற்றும் திருகோணமலைக்கு செல்லும் பயணிகளைச் சுமந்து வந்துள்ளது. போர்த்துக்கல் கொடியுடன் வந்துள்ள இந்த பயணிகள் கப்பல் இன்று இரவு இந்தோனேஷியா நோக்கி புறப்படும். (நி-8)



# பொலிஸ் அரசியல் மயமாக்கலுக்கு விரைவில் முடிவு கட்டப்படும்!

### பாதுகாப்பு அமைச்சர் உறுதி



**(கொழும்பு)**

**பொலிஸ் அரசியல் மயமாக்கலுக்கு முடிவு கட்டப்படுவதுடன் இலஞ்சம் மற்றும் ஊழலைக் கட்டுப்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் புதிய பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால உறுதியளித்துள்ளார்.**

பொலிஸின் சுதந்திரத்தை மீட்டெடுப்பதற்கு தாம் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

முந்தைய அரசாங்கங்களின் கீழ் பொலிஸ்துறை அரசியல் மயமாக்கப்பட்டதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கை பொலிஸாரை அரசியல் செல்வாக்கிலிருந்து விடுவிக்க ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஏற்கனவே நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில், இலங்கை பொலிஸார் பக்கச்சார்பற்ற, நியாயமான மற்றும் பொதுமக்களுக்கு பொறுப்புக்கூறும் வகையில் செயற்படுவதை உறுதி செய்வதில் தனது உறுதியான நிலைப்பாட்டை அமைச்சர் வலியுறுத்தியுள்ளார். (நி-8)

# மன்னாரில் தாய்-சேய் உயிரிழப்பு விசாரணைகள் ஆரம்பம்

### புதிய அரசு உத்தரவு

(மன்னார்)

மத்திய சுகாதார அமைச்சின் செயலாளரினால் அமைக்கப்பட்ட விசேட குழுவொன்று நேற்று புதன்கிழமை காலை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு விஜயம் செய்து அவ் வைத்தியசாலையில் தாய் மற்றும் சிசு உயிரிழந்தமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஆசாத் எம்.ஹனிபா தெரிவித்தார்.

மன்னார் பட்டித்தோட்டம் பகுதியைச்சேர்ந்த 28 வயதான இளம் தாய் வேணுஜா என்றழைக்கப்படும் ஜெகன் ராஜசிறி திருமணமாகி 10 வருடங்களாக குழந்தை இல்லாத நிலையில் நேற்று முன்தினம் பிரசவத்துக்காக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதியில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சையின்போது தாயும் சேயும் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், உறவினர்கள், பெற்றோர்கள் உட்பட நூற்றுக்கணக்கான பொது மக்கள் ஒன்றிணைந்து மகப்பேற்று விடுதியில் போராட்டம் நடத்திய நிலையில் வைத்தியசாலையில் பதற்றமான நிலை ஏற்பட்டது.

அதனைத்தொடர்ந்து, சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன், சம்பவ இடத்துக்கு வருகை தந்த மன்னார் நீதவான் இறந்த தாய் மற்றும் சேயின் உடல்களை பிரேத பரிசோதனைக்காகவும் மேலதிக விசாரணைகளுக்காகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்நிலையில், மத்திய சுகாதார அமைச்சின் செயலாளரினால் அமைக்கப்பட்ட விசேட குழு நேற்று காலை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு சென்று, விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மேலும் மாவட்ட ரீதியாக இவ்விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதோடு வடமாகாண சுகாதார அமைச்சிடமும் விசாரணைகளை முன்னெடுக்க கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்த விசாரணையின் முடிவில் தவறிழைத்தமை கண்டுபிடிக்கப்பட்டால் உரியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார். (நி-8)

# நடிகர் மோகன்லால் இலங்கைக்கு வருகை



(கொழும்பு)

மலையாளத் திரையுலகின் பிரபல நடிகர் மோகன்லால் விஸ்வநாதன் நேற்று முன்தினம் காலை இலங்கையை வந்தடைந்தார்.

இலங்கை வந்த நடிகர் மோகன்லாலுக்கு ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் சார்பாக அதன் பணியாளர்கள் மலர்க் கொத்து வழங்கி வரவேற்பு அளித்தனர்.

மலையாளத் திரையுலகில் நடிகர், திரைப்படத் தயாரிப்பாளர், பின்னணிப் பாடகர், திரைப்பட விநியோகஸ்தர் மற்றும் இயக்குநர் என மோகன்லால் பன்முகம் கொண்டவராவார்.

நடிகர் மோகன்லால் நான்கு முறை தேசிய விருதுகளைப் பெற்றவர், இரண்டு முறை மிகச் சிறந்த நடிகருக்கான விருதுகளையும், ஒரு தனிப்பட்ட நடுவர் குழு விருதையும் ஓர் சிறந்த படத் தயாரிப்பாளர் விருதையும் பெற்றவராக திகழ்கின்றார்.

அந்தவகையில் நடிகர் மோகன்லால் இலங்கைக்கு விஜயம் செய்தமைக்கான காரணங்கள் எவையும் வெளியாகாத நிலையில் இலங்கை வாழ் அவரது ரசிகர்கள் மிகவும் மகிழ்வுடன் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

# இந்திய மீனவர்களின் படகுகளை கடற்படைக்கு வழங்க உத்தரவு

(கொழும்பு)

இலங்கைக் கடற்பிரதேசத்துக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றத்துக்காகத் தமிழக மீனவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள 13 படகுகளைக் கடற்படையினரின் பயன்பாட்டுக்காக வழங்குமாறு புதிய ஆட்சிப்பீடம் உத்தரவிட்டுள்ளது.



இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டிய சமயம் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டு மன்னார் மற்றும் மயிலிட்டித்துறை முகங்களில் நிறுத்தப்பட்டிருக்கும் நல்ல நிலையில் உள்ள படகுகளையே கடற்படையினரிடம் கையளிக்குமாறு கடற்றொழில் நீரியல் வளத்துறை பணிப்பாளர் பணித்துள்ளார்.

கடற்றொழில் திணைக்களப் பணிப்பாளர் எல்.ஜி.ஆர். இசுராணி ஒப்பமிட்டு இந்த உத்தரவை மாவட்டங்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதற்கமைய மன்னாரில் இருந்து 5 படகுகளும் யாழ்ப்பாணத்தில் இருந்து 8 படகுகளும் என மொத்தம் 13 படகுகள் கடற்படையினரின் பாவனைக்காக வழங்கப்படவுள்ளன. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

### மெல்ல விடைகொடு கொடு மனமே...

## கண்ணீருடன் விடைபெற்ற டென்னிஸ் வீரர் ரஃபேல் நடால்



"டென்னிஸ் ஜாம்பவான்" என அழைக்கப்படும் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த ரஃபேல் நடால் சர்வதேச டென்னிஸ் போட்டிகளில் இருந்து நேற்று முன்தினம் கண்ணீருடன் விடை பெற்றுள்ளார். டெவிஸ் கோப்பைத் தொடரின் காலிறுதிச் சுற்றில் நெதர்லாந்து அணியை எதிர்த்து ஸ்பெயின் அணி களமிறங்கியது. இந்த டெவிஸ் கோப்பையுடன் ஸ்பெயின் நட்சத்திர வீரர் ரஃபேல் நடால் ஓய்வு பெற இருப்பதாக அறிவித்திருந்ததால், இந்தப் போட்டிக்கு ரசிகர்களிடையே அதிக எதிர்பார்ப்பு ஏற்பட்டது.

38 வயதான நடால் நெதர்லாந்து அணியின் போடிக் வான் டியை எதிர்த்து களமிறங்கினார். இப் போட்டியில் 4-1 என்று பின் தங்கிய நடால், பின்னர் ஆட்டத்தில் 4-3 என்று வேகமாக முன்னேறிச் சென்றார். ஆனால் முதல் இரண்டு செட்களையும் 6-4 , 6-4 என்ற நேர் செட் கணக்கில் இழந்தார்.

இதன்பின் நெதர்லாந்து அணியின் டாலனை 7-6, 6-3 என்ற கணக்கில் அல்காரஸ் வீழ்த்தினாலும், இரட்டையர் பிரிவில் போடிக் வான் டி - வெஸ்லி கூட்டணி 7-6, 7-6 என்ற கணக்கில் அல்காரஸ் - மார்செல் கூட்டணியை வீழ்த்தியது.

இதனால் ஸ்பெயின் அணி தோல்வியை சந்திக்க, ரஃபேல் நடாலின் பயணம் முடிவுக்கு வந்தது. இதனைத் தொடர்ந்து ரஃபேல் நடால் பேசுகையில், "அனைவருக்கும் குட் பை சொல்ல வேண்டும் என்று விரும்புகிறேன்.

அனைத்து சூழல்களிலும் எனக்கு ஆதரவாக இருந்த குடும்பத்திற்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

மேலும் ரசிகர்களின் மனதில் ஒரு சிறிய கிராமமான மலோர்காவில் பிறந்து வளர்ந்த சிறந்த மனிதனாக நினைவில் இருக்க விரும்புகிறேன்" இவ்வாறு ரஃபேல் நடால் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ரஃபேல் நடாலின் இறுதிப் போட்டியைக் காண்பதற்கு அவரது மனைவி, குழந்தை,சகோதரி ரோஜர் ஃபெடரர், ஜோகோவிச், செரினா வில்லியம்ஸ் உள்ளிட்ட ஏராளமான நட்சத்திரங்களும் வருகை தந்திருந்தனர்.

டெவிஸ் கோப்பையில் விளையாடி டென்னிஸ் வாழ்க்கையை தொடங்கிய நடால், தனது முதல் போட்டியில் தோல்வியை சந்தித்தார்.

தற்போது டெவிஸ் கோப்பையின் கடைசி போட்டியிலும் தோல்வியடைந்து டென்னிஸ் வாழ்க்கையை முடிவுக்கு கொண்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சாதனைகள்

டேவிஸ் கோப்பை போட்டியில் தொடர்ச்சியாக 29 ஒற்றையர் பிரிவில் வெற்றிகளைப் பெற்றுள்ள ரஃபேல் நடால், 2004,2008,2009,2011 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஸ்பெயின் அணி டேவிஸ் கோப்பையை வெல்வதற்கு உறுதுணையாக இருந்தார்.

இதுவரை 14 பிரெஞ்சு ஓபன், 2 அவுஸ்திரேலியா ஓபன், 2 விம்பிள்டன், 4 அமெரிக்க ஓபன், 2008 கோடைக்கால ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கம், 90 ஏடிபி தொடர் என பல்வேறு சாதனைகளை ஸ்பெயின் நட்சத்திர வீரர் ரஃபேல் நடால் படைத்துள்ளார். (6-8)




## சம்பியன்ஸ் டிராபி போட்டி அட்டவணை வெளியீட்டில் தாமதம்

### ஐ.சி.சி தெரிவிப்பு

2025 சம்பியன்ஸ் டிராபி தொடர்பான நிச்சயமற்ற தன்மை தொடரும் நிலையில், போட்டிக்கான அட்டவணையை வெளியிடுவது தாமதமாகலாம் என்று சர்வதேச கிரிக்கெட் நிர்வாக (ஐ.சி.சி) வட்டாரங்கள் நேற்று தெரிவித்துள்ளது.

முதன்மையான எட்டு அணிகள் பங்கேற்கும் போட்டிக்கு இன்னும் மூன்று மாதங்களுக்கும் குறைவான காலமே உள்ளது.

எனினும், இடங்கள் மற்றும் அட்டவணை குறித்து இன்னும் தெளிவு இல்லை.

ஐ.சி.சி நிகழ்வு பாகிஸ்தானின் லாகூர், ராவல்பிண்டி மற்றும் கராச்சி ஆகிய இடங்களில் நடைபெற உள்ளது.

எனினும், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பிசிசிஐ), இந்திய கிரிக்கெட் அணி 2025 சம்பியன்ஸ் டிராபிக்காக பாகிஸ்தான் பயணம் செய்யாது என்று ஐ.சி.சிக்கு உறுதி செய்ததை அடுத்து போட்டியின் தலைவிதி கேள்விக் குறியில் உள்ளது.

இந் நிலையில், மெகா நிகழ்வில் கலந்து கொள்ளாதது தொடர்பான இந்தியாவின் எழுத்துப் பூர்வப் பதிலின் நகலை வழங்குமாறு பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் ஐ.சி.சியிடம் கோரியதை அடுத்து, பிசிசிஐ மறுப்பு குறித்து எழுத்துப்பூர்வ விளக்கத்தை ஐ.சி.சி அதிகாரப் பூர்வமாக கோரியுள்ளது. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

அமரர்.திருமதி

## சேது (சேதா) சிறீகாந்தன்



அச்சுவேலி,வளலாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்.கில்னர் ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட அமரர் திருமதி சேது(சேதா) சிறீகாந்தன் அவர்கள் (20.11.2024) நேற்று புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமநாதன் (ஓய்வு நிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்)- அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்(ஓய்வு பெற்ற நில அளவை அத்தியட்சகர்)- பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், சிறீகாந்தனின் (DO, R/ACLG Office-jaffna) அன்பு மனைவியும், ஹம்சிகா(A/L-2024, யா/ அச்சுவேலி புனித தெரேசா மகளிர் கல்லூரி), துதீசன் (தரம்-10,யா/ யாழ்.இந்துக்கல்லூரி), அகீசன் (தரம்-7 யா/ அச்சுவேலி மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காவேரி-வீரசிங்கம்(கனடா), கங்காதரன் (கனடா), யமுனா-கருணாநதி(கனடா), சிவதரன்(கனடா), பவானி-ஞானேந்திரன் (அவுஸ்தி ரேலியா), திருவேணி-அன்ரன் கமிலஸ் (DO, பிரதேச செயலகம்-பச்சிலைப்பள்ளி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.11.2024 இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வண்ணை கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுகொள்கின்றோம்.

424/1/1,
(14) கில்னர் ஒழுங்கை,
K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
சு.சிறீகாந்தன்(ராஜா)
கணவன்.

தோற்றம்-01.01.1973 மறைவு-20.11.2024

# ஹரின் கைதாகி பிணையில் விடுதலை

(கொழும்பு)

தேர்தல் சட்டத்தை மீறிய சம்பவம் தொடர்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவை பதுளை பொலிஸார் கைது செய்து விடுவித்துள்ளனர்.

கடந்த 10ஆம் திகதி பது ளையில் நடைபெற்ற தேர்தல் பிரசார நிகழ்ச்சியின் போது பொலிஸாருடன் இடம் பெற்ற சம்பவம் தொடர்பில் வாக்கு மூலம் வழங்குவதற்காக பதுளை பொலிஸில் ஆஜரா கியிருந்த ஹரின் பெர்னாண்டோ கைது செய்யப்பட்டார்.

மேலும் அவரிடம் வாக்கு மூலம் பெறப்பட்ட பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பபட்டு பிணையில் விடுவிக் கப்பட்டார். (நி-8)



# விழிநீர் அஞ்சலி



புவித்துவம்– 03.06.1980 அமரத்துவம்– 19.11.2024

அமரர். அழகசுந்தரம் கிருபாகரன்

நேற்றைய தினம் வந்த
செய்தியொன்று இடியாய் வீழ்ந்து
ஏற்றமிகு தேசத்தின் ஏணியாக இருந்து
எம்மினத்தின் வளர்ச்சிக்கு வாரி வழங்கினீர்
பாடசாலைகள் தோறும்
உங்கள் நாமம் சொல்லும்
எங்கள் விடிவெள்ளியொன்று
மரணித்துவிட்டது
எங்கு காண்போம் உங்கள் புன்னகையை
ஏன் இந்த அவசரம் இடை நடுவில் சென்றீர்!

கனத்த இதயத்துடன்

யா/புனித சாள்ஸ் மகாவித்தியாலய பாடசாலை சமூகத்தினர்.

# குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் ஆஜரான பிள்ளையான்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் பிள்ளையான் என அழைக்கப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தனிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக்காலை குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்த நிலையில் 5 மணிநேர விசாரணை இடம்பெற்றது.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான சர்ச்சைக்குரிய வீடியோவை பிரித்தானிய சேனல்-4 கடந்த ஆண்டு ஜூன் 8ஆம் திகதி ஒளிபரப்பியது.

சுமார் 50 நிமிடங்கள் ஒளிபரப்பான குறித்த காணொளியில், சுவிட்சர்லாந்தில் தங்கியுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் அணியின் ஊடகப் பேச்சாளரான அசாத் மௌலானா தோன்றியிருந்தார்.

இந்நிலையில் சம்பந்தப்பட்ட காணொளியின் உள்ளடக்கம் குறித்து ஆராயுமாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சகத்திற்கு முறைப்பாடு கிடைத்ததையடுத்து, குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணையை ஆரம் பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# பாடசாலை உபகரணங்களுக்கான கொடுப்பனவு — வேலைத்திட்டம் ஆரம்பம் —

(கொழும்பு)

பாடசாலை புத்தகங்கள் மற்றும் பாடசாலை உபகரணங்களை கொள்வனவு செய்ய முடியாத பிள்ளைகளுக்கு அரசாங்கத்தால் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

அதற்கமைய, கொடுப்பனவு வழங்குவதற்குத் தகுதியான மாணவர்களின் தகவல்களை சேகரிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அனைத்து தகவல்களையும் இன்றைய தினத்துக்குள் சமர்ப்பிக்குமாறு அதிகாரிகள் தெரிவித்துள் ளனர்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு இந்தச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்பதற்காக, அந்த குடும்பங்கள் குறித்த தகவல்களை சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது. இந்த கொடுப்பனவு வழங் கப்படும் நடவடிக்கைகள் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க தெரிவித்துள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.கிளிநொச்சி மாவட்ட இராணுவ தளபதிக்கு பாராட்டு விழா



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களின் முப்படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்ரமசிங்கவிற்கான பாராட்டு விழா நேற்று முன்தினம் யாழில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக, வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் எல்.இளங்கோவன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, பொலிஸார் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (6-8)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)
காளிகோவிலடி சனசமூக நிலையத்தின 80 ஆவது ஆண்டு அமுத விழாவை முன்னிட்டு நடத்தப்படும் இரத்ததான முகாம் நிகழ்வு எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் மதியம் 12 மணிவரை காளி கோவிலடி சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே குருதித் தானம் வழங்கும் தன்னார்வலர்களை குறித்த இரத்ததான முகாமில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

# ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 99 ஆவது அவதார தினம்

(யாழ்ப்பாணம்)
ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 99 ஆவது அவதார தினம் நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ்.சேர். பொன்.இராமநாதன் வீதி சத்தியசாயி சேவா நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

காலை 8.30 மணிக்கு பிரசாந்திக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி வேத பாராயணம், பஜனையும் 10.45 மணிக்கு வயலின் இசை அர்ப்பணம் நிகழ்வில் இந்தியா அண்ணாமலை பல்கலைக்கழக பேராசிரியர் ஏ.டு.ஏ சுதர்சன் வயலின் இசையையும் ஸ்ரீனிவாசன் விஜேந்திரன், வரராஜசர்மா வரதசர்மா மிருதங்கமும் ரமண சர்மா யைசர்மா கஞ்சிராவையும் ரமண சர்மா கானாம்ருத சர்மா கடத்தையும் வாசிக்கவுள்ளனர்.

11.43 மணிக்கு "சாதனையூடாக சாயி" எனும் சிறப்புரையினை ஸ்ரீ.கே. மகேஸ்வரன் நிகழ்த்தவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து மாலை நிகழ்வாக 2.30 மணிக்கு பாலவிகாஷ் மாணவர்கள் வழங்கும் பிரேமவதாரி நாட்டியாஞ்சலியும் 2.30 மணிக்கு பாலவிகாஷ் மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் "ருத்ர தத்துவம் ஏகத்வம்" எனும் நாடகமும் உயிர் மெய் இயற்கை வாழ்வியல் மையத்தின் நிறுவுனர் ஸ்ரீ. சி. சுந்தரேஸ்வரன் "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்னும் தலைப்பில் சிறப்புரையும் மாலை 6.15 மணிக்கு மகா மங்களா ஆராத்தியுடன் குறித்த நிகழ்வு நிறைவு பெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

# தென்மராட்சி வலய பாடசாலைகளின் கல்விக் கண்காட்சி நிகழ்வு




(சாவகச்சேரி)
தென்மராட்சி வலயப் பாடசாலைகள் இணைந்து நடத்தும் கல்விக் கண்காட்சி நிகழ்வு நேற்றைய தினம் புதன்கிழமை காலை 10மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி கல்விக் கண்காட்சி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக பௌதீகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் தி.பத்மதாஸ் கலந்து சிறப்பித்திருந்தார்.

மேலும் நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள்,ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு மாணவர்களுடைய கல்விக் கண்காட்சி நிகழ்வைப் பார்வையிட்டிருந்தனர்.

மேற்படி கண்காட்சி நிகழ்வானது இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3மணி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-30)

# ஒளி விழா

(யாழ்ப்பாணம்)
யா/ புங்குடுதீவு தே.க த.க பாடசாலையின் ஒளி விழா நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு பாடசாலை அரங்கில் இடம் பெறவுள்ளது.

பாடசாலை முதல்வர் ந. மயூரன் தலைமையில் இடம்பெறும். இந் நிகழ்வில் வலய பிரதி நிதி ஈ.பி.எஸ். ஜ பாடசாலை தீவக கல்வி வலய கிறிஸ்தவ ஆலோசகர் டி. யூட்கிங் பிரதம விருந்தினராகவும். புங் குடுதீவு புனித சவேரியார் ஆலய பங்குத் தந்தை யு.லியான்ஸ் அடிகளார் சிறப்பு விருந்தினராகவும் ஓய்வுநிலை ஆசிரிய அலோசகர் செல்வி. பத்திமாராஜினி கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-8)

# இராசிபலன்

21.11.2024
கார்த்திகை 6, வியாழக்கிழமை
சஷ்டி முன்னிரவு 9.45 மணிவரை

பூசம் முன்னிரவு 8.31 மணிவரை
சுபநேரம் -7.40-9.10 மணிவரை
இராகுகாலம் - 1.40-3.10 மணிவரை

அமிர்த சித்தம்
சந்திராஷ்டமம் - கேட்டை, மூலம்.

வளவன்


மேஷம்

வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், தொலைபேசி வழித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள்.


கடகம்

வழிபாட்டில் ஆர்வம் கூடும், சமார்த்தியமாகப் பேசி காரியங்களை சாதிப்பீர்கள், சிந்தனை மிகுதியான நாள், செய் தொழில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.


துலாம்

எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.


மகரம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பேச்சில் கனிவு பிறக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.


ரிஷபம்

நாடி வந்தவர்களுக்கு நன்மை செய்து மகிழும் நாள், குடும்பத்தினர் பாராட்டும் வகையிலான காரியங்களை செய்து முடிப்பீர்கள், அரச வழியில் அனுகூலமுண்டு, வழிபாட்டில் ஆர்வம் கூடும்.


சிம்மம்

திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம்.


விருச்சிகம்

பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, தொழில் முயற்சியில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.


கும்பம்

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.


மிதுனம்

இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், உறவினர்கள் வழியே சுப செய்திகள் வந்து சேரலாம், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், வாக்கு மேன்மையுண்டு.


கன்னி

குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், திடீர் பண வரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், கௌரவமான நாள்.


தனுசு

நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அர்ப்பத்தனமாக நடந்து கொள்ளலாம், காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், ரோக பயமுண்டு.


மீனம்

அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தாழ்ந்த சுபாவமுண்டு.

விபரீத எண்ணங்கள் விபரீத விளைவுகளை ஏற்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற தயாராக உள்ளோம்

## விஜித ஹேரத்



(கொழும்பு)

**புதிய அரசாங்கம் இந்தியாவுடன் இணைந்து செயற்படத் தயாராக உள்ளது என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

எங்கள் கலாசார உறவுகளையும் மற்றும் சிறந்த இருதரப்பு உறவுகளை எங்கள் மக்களின் பரஸ்பர நன்மைக்காக வலுப்படுத்துவதற்காகவும் இந்தியாவுடன் இணைந்து செயற்படுவதற்கான எங்களது உறுதிப்பாட்டை மீள வலியுறுத்துகின்றேன் என விஜித ஹேரத் சமூக ஊடக பதிவில் தெரிவித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சரின் வாழ்த்துச் செய்திக்கு பதிலளிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (நி-8)


**லங்கா மஹால் (PVT) LTD**

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**00919566156719**

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
**077 839 3974**

(559)



# விற்பனைக்கு

01. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்குமுன்பாக32 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட இரண்டு கடைகளும்

02. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 52 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட மூன்று கடைகளும்

03. யாழ். கஸ்தூரியார் வீதியில் இந்து ஆரம்ப பாடசாலைக்கு அண்மையில் 3 1/2 பரப்பு காணியும்

04. யாழ். K.K.S வீதியில் சிக்னல் சந்திக்கு அண்மையில் 20 அடி அகலமும் 120 அடி நீளமும் கொண்ட 3 மாடி கடையும்

05. யாழ் கந்தர்மடம் சந்திக்கு அண்மையில் சுற்று மதிலுடன் கூடிய 3 பரப்பும் 3 குழியும் கூடிய காணியும்

06. யாழ் பலாலி வீதியில் தபாற்பெட்டி சந்திக்கு அண்மையில் மக்கள் வங்கிக்கு அருகில் 4 பரப்பு வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு.

(2468). (சி-1621)

தொடர்புகளுக்கு
**077 723 2535**


## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்
## தனியார் பாதுகாப்பு சேவை பெற்றுக்கொள்ளல் தொடர்பான கேள்வி அறிவித்தல்-2025

நல்லூர் பிரதேசசபையின் உள்ளூராட்சிமன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த விலைக் கேள்விதாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இடங்களிற்கு பாதுகாப்புச் சேவையினை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 2024.11.21 - 2024.12.04 நண்பகல் 12.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 2024.12.04 பி.ப 14.00 மணி வரை
கேள்வி திறக்கும் திகதி : 2024.12.04 பி.ப 14.30 மணி

1. கேள்வி கோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
2. விலைக் கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாமல் இருக்கவேண்டும்.
3. கேள்விதாரர் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்த நிலையான தொலைபேசி தொடர்பிலக்கத்துடன் கூடிய ஒரு பதிவுக் காரியாலயத்தையோ அல்லது கிளைக் காரியாலயத்தையோ கொண்டிருத்தல் வேண்டும். அவசியமேற்படுமிடத்து குறித்த முகவரி நேரில் பரிசீலிக்கப்படும். மேலும் **சேவை வழங்குநர் தெரிவில் இவ்விடயம் முக்கியமாக கருத்திற்கொள்ளப்படும்.**
4. தகுதிவாய்நத விலைக் கேள்விதாரர் விலைக் கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பக்கடிதத்தினை சமர்ப்பித்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை, கொக்குவில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணி வரை மீளளிக்கமுடியாத கேள்வி படிவக்கட்டணமாக **ரூபா 2,000.00** இனையும், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணமாக **ரூபா 25,000.00** இனையும் பணமாகச் செலுத்துவதன் மூலம் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
5. தெரிவு செய்யப்படும் நிறுவனம் செயலாற்றுகை பிணை முறியாக **ரூபா 400,000/=** ஐ செலுத்தி ஒப்பந்தமொன்றை செய்து கொள்ள வேண்டும்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், உள்ளூராட்சி பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும், மூலப்படிவம் கொண்ட தபாலுறையில் **மூலப்பிரதி** எனவும் இணைப்படிவத்தில் **இணைப்பிரதி** எனவும் எழுதப்பட்டு தனித்தனி உறையிலிட்டு அவ்விரண்டினையும் பிறிதொரு உறையிலிட்டு **"செயலாளர்,நல்லூர் பிரதேசசபை, இல,14/5, கருவப்புலம் வீதி. கொக்குவில் கிழக்கு, கொக்குவில்."** எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ (பதிவுத்தபால் முடிவுத்திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறவேண்டும்) அல்லது நேரடியாகவோ அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். பிந்திய விலைக் கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
7. கேள்வி திறக்கப்படும் போது கேள்வியாளரோ அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.
8. கேள்வி கோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்வி கோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதாரர்கள்/ கேள்விதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்
9. இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக **நல்லூர் பிரதேசசபை பெறுகைக்குழுவால்** எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.
10. மேலதிக விபரங்களை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | பாதுகாப்புச் சேவை தேவைப்படும் இடம் | தேவைப்படும் ஆளணி எண்ணிக்கை | | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|---|
| | | இரவு | பகல் | |
| 1 | தலைமை அலுவலகம், கொக்குவில் | 01 | 01 | 2025.01.01 2025.12.31 |
| 2 | கொக்குவில் உப அலுவலகம் மற்றும் கொக்குவில் ஆயுள் வேத வைத்தியசாலை | 01 | 01 | |
| 3 | கொக்குவில் பொதுச்சந்தை, | 01 | 01 | |
| 4 | கோண்டாவில் ஆயுள்வேதம் வைத்தியசாலை | 01 | சனி,ஞாயிறு பொது விடுமுறை தினங்களில் | |
| 5 | திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவ நிலையம், காரைக்கால் | 01 | 01 | |
| 6 | திருநெல்வேலி பொதுச்சந்தை | 01 | 01 | |
| 7 | கொக்குவில் கொல்களத்துடன் இணைந்த சுற்றுச்சுழல் கண்காணிப்பு நிலையம் | 01 | 01 | |
| 8 | அரியாலை காரைமுனங்கு கழிவு முகாமைத்துவ நிலையம் | 01 | 01 | |
| | மொத்தம் | 08 | 08 | |

**தலைவர்,**
**உள்ளூராட்சி பெறுகைக்குழு,**
**நல்லூர் பிரதேசசபை,**
**கொக்குவில்.**
**2024.11.21**

(சி-1625)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# திருமண ஊர்வலத்தில் பொழிந்த பணமழை

### வைரலாகும் வீடியோ



(டில்லி)

சமூக ஊடகங்களில் வெளியாகும் வீடியோக்களில் சில நகைச்சுவையாகவும், சில விமர்சனத்திற்குள்ளாவதையும் காண முடிகிறது.

அந்த வகையில் தான் தற்போது சமூக வலைத் தளங்களில் வைரலாகும் திருமண ஊர்வலத்தின் வீடியோ உத்தரப்பிரதேச மாநிலம் சித்தார்த்நகரில் எடுக்கப்பட்டுள்ளது.

வீடியோவில் திருமண ஊர்வலத்தின் போது ரூ.100, ரூ.200 மற்றும் 500 ரூபாய் நோட்டுகளை வீசுகின்றனர். மணமகன் ஊர்வலத்தின் போது அங்கு கூடியிருந்த விருந்தினர்கள் பணத்தை வீசுகின்றனர்.

காற்றில் பறக்கும் ரூபாய் நோட்டுகளை அங்கு கூடியிருந்த மக்கள் எடுத்துச் செல்கின்றனர்.

இந்த வைரலான வீடியோ அப்சல் மற்றும் அர்மானின் திருமணத்திலிருந்து எடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

சமூக வலைத்தளங்களில் வைரலான வீடியோவை பார்த்த பயனர்கள் பலரும் தங்களது கருத்துகளை தெரிவித்து வருகின்றனர். அதில் ஒரு பயனர், "சகோதரரே, பணத்தை ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்கவும்" என்றும் மற்றொருவர் "இவ்வளவு பணம் இருந்தால், நான்கு ஏழைப் பெண்களுக்குத் திருமணம் செய்திருக்கலாம்" என்றும் தெரிவித்துள்ளனர். (நி-8)

# ❖ காசாவுக்கு நிதி ❖ உக்ரைன் போர் நிறு

# ஜி-20 மாநாட்டி

(ரியோ டி ஜெனிரோ)

**காசாவுக்கு நிதி அளிப்பதுடன் உக்ரைனில் போர் நிறுத்தப்பட வேண்டும் என ஜி-20 மாநாட்டில் தலைவர்கள் கூட்டாக பிரகடனம் செய்தனர்.**

பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் ஜி-20 மாநாடு நடந்தது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பிரதமர் மோடி உள்ளிட்ட பல நாட்டுத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் காசா விவகாரம், உக்ரைன் போர், ஐ.நா. சபை விரிவாக்கம் குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதற்கு பெரும்பாலான நாடுகள் ஆதரவு தெரிவித்த போதிலும் சில நாடுகள் எதிர்ப்பைப் பதிவு செய்தன.

இந்தத் தீர்மானத்தில் காசாவில் நிலவும் மோசமான சூழ்நிலை மற்றும் லெபனான் வரை பரவிய மோதல் குறித்து கூறப்பட்டு உள்ளது. மேலும் மனிதாபிமான உதவிகளைச் செய்ய வேண்டும் எனவும், அப்பாவி மக்களை பாதுகாக்க வேண்டும் எனவும் அதில் கூறப்பட்டு உள்ளது.

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் அமைதி ஏற்பட வலியுறுத்தப்பட்டு உள்ளது. இந்தத் தீர்மானத்தில் ஹமாஸ் பயங்கரவாதிகள் பற்றி குறிப்பிடப்படவில்லை.

அதேநேரத்தில் மாநாட்டின் போது பேசிய ஜோ பைடன், இந்தப் போருக்கு ஹமாஸ் பயங்கரவாதிகளே முக்கிய காரணம்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்க ஹமாஸ் அமைப்புக்கு தலைவர்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும் எனக் கூறியிருந்தார்.

ஜி-20 அமைப்பில் ரஷ்யா இடம்பெற்றுள்ள நிலையில், அந்நாட்டு ஜனாதிபதி புடின் கலந்து கொள்ளவில்லை. அவருக்குப் பதில் வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ராவ் பங்கேற்றார். ஜி-20 தீர்மானத்தில் உக்ரைனில் போர்

### இந்த ஆண்டில் இதுவரை

# 274 பேருக்கு மரணதண்டனை நிறைவேற்றிய சவுதிஅரேபியா!

(ஜெத்தா)

இந்த ஆண்டில் (2024 இல) இதுவரை மொத்தமாக 274 பேருக்கு சவுதி அரேபியாவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. அதில் 101 பேர் வெளிநாட்டவர்கள் ஆவர். இது கடந்த 2023 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளை விட இது மூன்று மடங்கு அதிகம் என்று கூறப்படுகிறது.

வேலைவாய்ப்பு உள்ளிட்ட காரணங்களுக்காக இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலிருந்து மத்திய கிழக்கில் செல்வச்செழிப்பான நாடாக விளங்கும் சவூதி அரேபியாவில் பலர் தங்கியுள்ளனர்.

பாகிஸ்தானைச் சேர்ந்த 21 பேர், ஏமன்-20 பேர், சிரியா - 14 பேர், நைஜீரியா-10, எகிப்து-9 பேர், ஜோர்டான்-8 பேர், எத்தியோப்பியா - 7 பேர், சூடான், இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தானில் இருந்து தலா 3 பேர், இலங்கை, எரித்திரியா மற்றும் பிலிப்பைன்ஸில் இருந்து தலா ஒருவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக வழக்குகள் இந்த ஆண்டு மரண தண்டனையின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளது.

இந்த ஆண்டு போதைப் பொருள் வழக்குகளில் 92 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. அதில் 69 பேர் வெளிநாட்டவர்கள். ஒரு வருடத்தில் இந்த அளவிலான எண்ணிக்கையில் வெளிநாட்டவர்களுக்கு சவுதி அரேபியா மரண தண்டனை நிறைவேற்றுவது இதுவே முதல் முறை.



முன்னதாக 2023இல் சீனா மற்றும் ஈரானுக்கு அடுத்தபடியாக அதிக எண்ணிக்கையிலான மரண தண்டனையை நிறைவேற்றிய நாடாக சவுதி அரேபியா இருந்தது குறிப்பிடத்தக்கது. (நி-8)

# பதற்றத்தி

# காசா செ

(காசா)

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு காசா நகருக்கு நேற்று முன்தினம் சென்றுள்ளார். கடந்த மாதம் ஈரான் அணு சக்தி கட்டமைப்பை குறிவைத்து தாக்குதல் நடத்தியதை ஒப்புக்கொண்ட நெதன்யாகு தெற்காசியாவில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழலுக்கு மத்தியில் காசாவுக்கு திடீர் வருகை தந்துள்ளது முக்கியத்துவமானதாகப் பார்க்கப்படுகிறது. இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் காட்ஸ் மற்றும் இராணுவத் தளபதியுடன் பாதுகாப்பு கவசம், பாலிஸ்டிக் ஹெல்மெட் சகிதம் காசாவில் நெதன்யாகு சுற்றிப்பார்த்த வீடியோவை இஸ்ரேல் பகிர்ந்துள்ளது.

கடந்த வருடம் ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலின், ஆக்கிரமிப்பை எதிர்த்து போராடி வரும் கிளர்ச்சி அமைப்பான ஹமாஸ் அந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றுத்தப்பட வேண்டும்
# டில் பிரகடனம்!




நிறுத்தவும் உடனடியாக அங்கு அமைதி ஏற்படுத்தவும் வலியுறுத்தப்பட்டது. இதில் ரஷ்யாவின் பெயர் குறிப்பிடப்படவில்லை.

கோடீஸ்வரர்களுக்கு வரி விதிக்க வேண்டும் என ஜி-20 பிரகடனத்தில் கூறப்பட்டு உள்ளது. இதற்கு பிரேசில் ஜனாதிபதி ஆதரவு அளித்தாலும் அர்ஜென்டினா எதிர்ப்பு தெரிவித்தது. இந்த திட்டத்தால் 3 ஆயிரம் பேர் உலகம் முழுவதும் பாதிக்கப்படுவர். லத்தீன் அமெரிக்காவில் மட்டும் 100 பேர் வரி கட்ட வேண்டிஇருக்கும்.

இந்தப் பிரகடனத்தில் மிகவும் முக்கியமாக உலகளவில் உணவில்லாமல் பசியால் வாடும் மக்களுக்கு உதவும் வகையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உள்ளது.

பசி மற்றும் வறுமைக்கு எதிராகப் போராடுவது பிரேசில் அரசின் மிகவும் முக்கியமான திட்டமாகும். (நி-8)

# த்திற்கு மத்தியில்
# சன்ற நெதன்யாகு!



நாட்டுக்குள் புகுந்து திடீர் தாக்குதல் நடத்தியது. இதில் சுமார் 1200 இஸ்ரேலியர்கள் உயிரிழந்தனர். மேலும் 250 பேர் பிணைக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டனர். இந்த அடியை எதிர்பார்த்திராத இஸ்ரேல் பழிக்குப் பழி வாங்க பாலஸ்தீன நகரங்களின் மீது தாக்குதல் நடத்தத் தொடங்கியது. அவ்வாறு தொடங்கிய இஸ்ரேலின் தாக்குதல்கள் கடந்த 13 மாதங்களாக நீடித்து வருகிறது. இந்த தாக்குதல்களில் இதுவரை 43 ஆயிரத்துக்கும் அதிகமான பாலஸ்தீனிய பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 1 லட்சத்திற்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

முற்றிலுமாக உருக்குலைந்த காசா நகரில் அடிப்படை மருத்துவ வசதிகள், அத்தியாவசிய உணவு என அனைத்திற்கும் தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் அகதிகளாக தற்காலிக முகாம்களில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

போரை அமெரிக்கா, ஐ.நா என சர்வதேச அரங்கில் எடுக்கப்பட்ட அனைத்து பேச்சுவார்த்தைகளும் தோல்வியில் முடிந்துள்ளது. இதற்கிடையே கடந்த ஞாயிற்றுக் கிழமை பாலஸ்தீனத்தில் வடக்கு காசாவின் பெய்ட் லாஹியாவில் உள்ள அடுக்கு மாடி குடியிருப்பு கட்டடத்தின் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் அதிகளவான மக்கள் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலில் 72 பேர் உயிரிழந்துள்ளதாக காஸா அரசு ஊடகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## திடீரென விவாகரத்தை அறிவித்த ரஹ்மான்-சாயிராபானு



(டில்லி)

இசைப்புயல் ஏ.ஆர் ரஹ்மானை விட்டு பிரிவதாக அவரது மனைவி சாயிரா பானு அறிவித்துள்ளார்.

இந்திய சினிமா மட்டுமின்றி உலக அளவிலும் பிரபல்யமான இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான். அவருக்கு சாயிரா பானு உடன் 29 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது.

அவர்களுக்கு இரண்டு மகள்கள் மற்றும் ஒரு மகனும் இருக்கின்றனர்.

இந்நிலையில் கருத்து வேறுபாடு காரணமாக ஏ.ஆர்.ரஹ்மானை விட்டு பிரிவதாக அவரது மனைவி சாயிரா அறிவித்து இருக்கிறார். மிகுந்த வலி மற்றும் வேதனை உடன் இந்த முடிவை எடுத்து இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

ஒருவருக்கொருவர் அதிகம் ஆழமான அன்பு இருந்தாலும் பிரச்சினைகளால் ஏற்பட்ட இடைவெளி இருவராலும் தற்போது அதை சரி செய்ய முடியும் என தோன்றவில்லை என அவர் கூறியுள்ளார்.

இந்த செய்தி ரசிகர்கள் அனைவருக்கும் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. (நி-8)

## முன்னெச்சரிக்கையாக மூடப்பட்ட உக்ரைனில் உள்ள அமெரிக்க தூதரகம்




(கீவ்)

வான்வழித் தாக்குதல் நடத்தப்படலாம் என்ற எச்சரிக்கைகளுக்கு மத்தியில் உக்ரைன் தலைநகர் கீவில் உள்ள அமெரிக்கத் தூதரகம் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நேற்று புதன்கிழமை மூடப்பட்டது.

இது தொடர்பில் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ள தூதரகம், உக்ரைனில் உள்ள அமெரிக்க குடிமக்கள் சாத்தியமான வான்வழித் தாக்குதல் எச்சரிக்கைகளுக்குத் தயாராகவும் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவும் வலியுறுத்தியது.

பதவியிலிருந்து வெளியேறும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் நிர்வாகத்தின் புதிய அங்கீகாரத்தைத் தொடர்ந்து, உக்ரைன் அமெரிக்க வழங்கிய ஏவுகணைகளை ரஷ்ய எல்லைக்குள் செலுத்திய ஒரு நாளுக்குப் பின்னர் இந்த எச்சரிக்கை வந்துள்ளது. ஏவுகணைத் தாக்குதலுக்குப் பின்னர் ரஷ்யா "தகுந்த" பதிலடி வழங்குவதாக உறுதியளித்துள்ளது. உக்ரைனுக்கு அதன் எல்லைக்குள் ஆழமான இலக்குகளைத் தாக்கும் திறன் கொண்ட நீண்ட தூர ஏவுகணைகளை வழங்குவதற்கு எதிராக மேற்கத்தேய நாடுகளுக்கு ரஷ்யா பல முறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இத்தகைய நடவடிக்கைகள் அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் உள்ளிட்ட நேட்டோ உறுப்பினர்களை போரில் நேரடி பங்கேற்பாளர்களாக ரஷ்யா கருத வழிவகுக்கும் என்று மொஸ்கோ எச்சரித்துள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெங்காயத்தின் விலை அதிகரிப்பு



(கொழும்பு)

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பெரிய வெங்காயத்தின் விலை திடீரென அதிகரித்துள்ளதாக தம்புள்ளை பொருளாதார மத்திய வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

ஒரு கிலோ உள்நாட்டு பெரிய வெங்காயத்தின் மொத்த விலை 400 ரூபாவாகவும் ஒரு கிலோ வெளிநாட்டு வெங்காயத்தின் மொத்த விலை 370 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது.

இதன்படி நேற்றுக் காலை தம்புள்ளை பொருளாதார நிலையத்தில் ஒரு கிலோ உள்நாட்டு பெரிய வெங்காயத்தின் மொத்த விலை 380 - 400 ரூபாவாக இருந்ததாக வர்த்தகர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்தியா, பாகிஸ்தான், தூத்துக்குடி, ஈரான் உள்ளிட்ட பல நாடுகளிலிருந்து பெரிய வெங்காயம் இறக்குமதி செய்வது மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பெரிய வெங்காயத்தின் விலை ஒரேயடியாக அதிகரித்துள்ளதாக வர்த்தகர்கள் குறிப்பிட்டுள்ளனர். (நி-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 120 | 150 | 100-120 | 150 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 185 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 250 | 250 | 200-220 | 300 |
| தக்காளி | 200 | 320 | 350 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 250 | 250 | 100-150 | 150 |
| கோவா | 200 | 200 | 250 | 200 | 300 |
| கரட் | 150 | 200 | 250 | 150 | 250 |
| பூசணி | 100 | 120 | 100 | 100 | 150 |
| புடோல் | 120 | 120 | 150 | 200 | 200 |
| வாழைக்காய் | 100 | 100 | 150 | 70 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 300 | 150-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 350 | 300 | 250 | 120 | 350 |
| பாகற்காய் | 600 | 500 | 650 | 500 | 600 |
| வெண்டக்காய் | 120 | 120 | 150 | 80-150 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 150 | 130 | 200 |
| பயற்றங்காய் | 400 | 260 | 250 | 200-250 | 300 |
| லீக்ஸ் | 180 | 250 | 250 | 180 | 300 |
| பீற்றூட் | 140 | 150 | 250 | 220 | 300 |
| கறிமிளகாய் | 500 | 600 | 600 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 400 | 150-200 | 600 |
| போஞ்சி | 400 | 500 | 500 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 150 | -- | 120 |
| கீரை - 1 பிடி | 80 | 150 | 150 | 80 | 120 |
| தேசிக்காய் | 500 | 800 | 800 | 600-700 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 80-160 | 120-180 |
| இராசவள்ளி | -- | 900 | 650 | 700 | 1500 |
| வெங்காயப்பூ | -- | 450 | -- | -- | -- |
| முள்ளங்கி | 100 | 120 | 100 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 100 | 80 |
| ஈரப்பலா | 100 | 200 | 100 | -- | 200 |

# இன்று ஒரு தகவல் 269



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## சிரிப்பு

வாய்விட்டு சிரிச்சா நோய்விட்டுப்போகும் என்று சொல்வது உண்டு. அது என்ன வெறும் அலங்காரத்துக்காக சொன்ன வார்த்தையா? இல்லை. அர்த்தத்தோடு சொன்ன வார்த்தையா? அப்படி என்று யோசித்தால். அதிலே நிஜமாகவே அர்த்தம் இருக்கு என்பது தான் தெரியுது.ஆதார பூர்வமாக அதற்கு சில நிரூபணங்களும் இருக்கிறது.

நார்மன் கொசின்ஸ் என்று ஒருத்தர்.அவர் ஒரு அமெரிக்க பத்திரிகை ஆசிரியர். அவருக்கு ஏதோ ஒரு விதமான அலர்ஜி நோய். டொக்டர்கள் எல்லாம் அதற்கு எந்த விதமான வைத்தியமும் கிடையாது என்று சொல்லி விட்டார்களாம்.டொக்டர்கள் தான் சொல்லி விட்டார்களே. அதனால் இது இப்படி இருந்துவிட்டு போகட்டும் என்று விட்டுவிட வேண்டியது தான் என்று அவர் நினைக்கவில்லை.உடனே அவர் என்ன செய்தார் என்றால். கோட்டலில் ஒரு ரூம் எடுத்துக் கொண்டார். அங்கே போனார். தினமும் அவருக்கு பிடித்த தமாஷ் படங்களை டி.வி யிலே போட்டுப் பார்த்தார். சிரிப்பு புத்தகங்களைப் படித்தார்.

கொஞ்சநாள் ஆச்சு. அவருக்கு இருந்த தொந்தரவு குணமாக ஆரம்பித்துவிட்டது. இதை கேள்வி பட்டவுடனே பழைய டொக்டர்கள் எல்லாம் வந்து பார்த்தார்கள். அவர் உடம்பை சோதனை செய்தார்கள். அவர் உடம்பு குணமாக உதவியாக இருந்தது. சிரிப்பு தான் என்பதை விஞ்ஞான பூர்வமாக அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். இருந்தாலும் விஞ்ஞான பூர்வமாக இவர்கள் ஒத்துக் கொண்டார்கள். இருந்தாலும் சிரிப்பு எந்த முறையில் எந்த விதத்திலே உதவி செய்கிறது என்பதை இன்னும் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை.ஆனாலும் ஒரு சில விடயங்கள் மட்டும் புரியுது. அது என்ன என்றால். சிரிப்பு சுவாசத்தை மேம்படுத்துகிறது இரத்த அழுத்தத்தை குறைக்கிறது. உடம்பு குணமாகுவதற்கு உரிய சில ஹோர்மோன்கள் அதிகமாக உருவாகி வருவதற்கு வழி செய்யும்.

இந்த அளவுக்கு தான் சிரிப்போட செயற்பாட்டை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. இருந்தாலும் அதைப்பற்றி கண்டுபிடிக்க வேண்டியது இன்னமும் ஏராளமாக இருக்கிறது.அதையெல்லாம் விவரமாக கண்டுபிடிக்கிற வரைக்கும் நாம் காத்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. இப்பவே தாராளமாகச் சிரிக்கலாம். அதிலே என்னத்திற்கு சிக்கனம்? காசா? பணமா? சிரிப்பு என்றால் "ஹா ஹா" என்று சத்தம் போட்டு சிரித்தால் தான் உடம்புக்கு நல்லது என்று இல்லை.லேசான புன்னகை கூட உடம்புக்கு நல்லது செய்யுமாம்.

லேசான புன்னகை பூத்தால் அந்த சமயத்திலே எம் உடம்பு முழுவதும் அமைதி அடையுதாம். இதையும் ஆதாரபூர்வமாக கண்டுபிடித்துத் தான் சொல்கிறார்கள்.எப்போதாவது மனது சங்கடமாக இருக்கிறபொழுது கொஞ்சம் முயற்சி செய்து முகத்திலே புன்னகையைக் கொண்டு வந்து பாருங்கள். அதனுடைய சுகம் உங்களுக்கு அனுபவித்துப் பார்த்தால் தான் தெரியும். கண்ணும் உதடும் மலரும்போது இருக்கிற ஆனந்தமே ஆனந்தம் என்கிறார்கள். அனுபவித்துப் பார்த்தவர்கள் வாழ்க்கையிலே நாம் தமாசாக இருக்க வேண்டும் என்றால் அதற்கு சில வழிகளை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். முதலிலே நீங்கள், உற்சாகமாக இருக்கிறவர்கள் கூடவே அதிக நேரம் இருங்கள். அழுது வடியிறவர்களை விலக்கிக் கொள்ளுங்கள். உங்கள் முன்னால் இருக்கிறவர் எப்பொழுதும் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டே இருக்கிறவராக இருந்தால் கொஞ்ச நாளிலே உங்கள் முகமும் அப்படியே ஆகிவிடும். ஜாக்கிரதை.

இரண்டாவது எடுத்ததற்கெல்லாம் அவசரப்படக்கூடாது. எதையும் நிதானமாக உணர வேண்டும்.அடுத்தவர்கள் எங்களை மதிக்க வேண்டும் என்பதற்காக நாம் பகட்டாக நடந்து கொள்ள ஆசைப்படக் கூடாது. உங்களுக்கு பிடித்த தமாசான வீடியோ படங்கள், புத்தகங்கள் இதையெல்லாம் லிஸ்ட் போடுங்கள். முடிந்த அளவுக்கு வாங்கிச் சேர்த்து வீட்டுக்குள்ளேயே ஒரு நூலகத்தை உண்டாக்கிக் கொள்ளுங்கள்.ஒரு பெரிய தொழிலதிபர் மிகவும் வெற்றிகரமாக தொழில் செய்து வருகிறாராம். அவர் எப்படி என்றால். அடிக்கடி ரயிலிலே பிரயாணம் செய்கிறபொழுது நியூஸ் பேப்பரை வைத்துக்கொண்டு மிகவும் சுவாரஸ்யமாக படித்துக் கொண்டே போவாராம்.

நியூஸ் பேப்பரிலே அப்படி என்ன சுவாரஸ்யம்? என்று எட்டிப் பார்த்தால் உள்ளே ஒரு காமெடி புத்தகத்தை வைத்து படித்துக் கொண்டிருப்பாராம். என்னங்க இப்படி என்று கேட்டால். என் மனது லேசாக இருக்கிறதுக்கு இது மிகவும் உதவியாக இருக்கிறது என்பாராம், அது ஒரு பக்கம் இருக்கட்டும். சிரிப்பு என்றால் எல்லா விதமான தமாசும் உடம்புக்கு நல்லது என்று நினைத்துவிடக் கூடாதாம். ஜேட்ஸ் கோரல் என்னும் அமெரிக்க உளவியல் நிபுணர் என்ன சொல்கிறார் தெரியுமா? அடுத்தவர்களை குறை சொல்வது. கேலி செய்வது. நையாண்டி செய்வது. இது மாதிரியான நகைச்சுவை எல்லாம் நல்லது இல்லை என்கிறார் அவர்.

அடுத்தவர்களைத் தொந்தரவு செய்யாத ஜோக்குகள் தான் எப்பவும் நல்லது. யாராவது ஜோக் சொன்னால் தாராளமாக சிரிக்க வேண்டும். ஒருத்தர் வந்தார் இன்னொருத்தரை கூட அழைத்துக் கொண்டு வந்து என்னிடம் காட்டினார். அவர் தன் முகத்தை மிகவும் கடுமையாக வைத்துக் கொண்டிருந்தார்.என்ன விடயம் என்று விசாரித்தேன். வந்தவர் என்னைப் பார்த்து சேர் இவர் கூட ஒரு பெரிய பிரச்சினை என்றார். என்ன என்றேன். ஏதாவது ஒரு ஜோக் சொன்னால் உடனே சத்தம் போட்டுச் சிரிக்க ஆரம்பித்துவிடுகிறார். சேர் அப்படி என்றார்.ஜோக்கை கேட்டுவிட்டு சிரிக்க ஆரம்பிச்சா அது பிரச்சினை இல்லையே என்றேன். சிரிக்க ஆரம்பிக்கிறது பிரச்சினை இல்லை சேர். ஆனால் அப்படி ஆரம்பிக்கிற சிரிப்பை அதற்கு பின்பு நிறுத்தவே மாட்டேன் என்கிறார் சேர் அது தான் பிரச்சினை அப்படி என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய காயம் போட்டியில் முல்லைத்தீவுக்கு 2 இடங்கள்




(முல்லைத்தீவு)

அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட தேசிய காயம் கண்காணிப்பு போட்டியில் முல்லைத்தீவு மாவட்டம் 2 ஆம் இடம், வைத்திய சாலைகளில் மாவட்ட பொது வைத்திய சாலை 2 ஆம் இடத்தினை பெற்று சாதனை படைத்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையானது சுகாதார அமைச்சினால் வைத்தியசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட National Injury Surveillance system போட்டியில் Death Surveillance பிரிவில் தேசிய ரீதியில் முல்லைத்தீவு மாவட்டம் இரண்டாம் இடத்தையும், வைத்தியசாலைகளில் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## தொழில்நுட்ப உத்தியோகத்தரை தாக்கிய மணல் மாபியா கும்பல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் செயற்பட்டு வரும் வடக்கு மாகாண பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அலுவலக தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரை மணல் மாபியா கும்பலால் தாக்கப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலுக்கு முதல் நாளான கடந்த 13ஆம் திகதி அன்று கரைச்சி பிரதேச சபையின் சபை நிதி மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் அம்பாள்குளம் 2ஆம் குறுக்குத் தெரு வீதியின் புனரமைப்பு வேலைக்காக பறிக்கப்பட்ட கிரவலினை மேற்படி தொழில்நுட்ப உத்தியோகத்தர், கரைச்சிப் பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் சகிதம் பணியில் ஈடுபட்ட வேளை அங்கு வந்த கும்பல் ஒன்று தாக்கி விட்டு சென்றதாக மாகாண தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான தொழில்நுட்ப உத்தியோகத்தர் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளதுடன் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியதாக தெரிய வருகிறது.

தாக்குதலை நடத்தியவர்கள் கிளிநொச்சி பிரதேசத்தைச் சேர்ந்த பிரபல மணல் கடத்தல் மாபியாக்கள் எனத் தெரிவித்துள்ள வடக்கு மாகாண தொழில்நுட்ப உத்தியோகத்தர் சங்கத்தின் பிரதிநிதிகள், பணியில் ஈடுபட்டுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசு தவறினால் தொடர் பணிப்புறக்கணிப்பை முன்னெடுப்போம் என்று எச்சரிக்கையும் விடுத்துள்ளனர். (6-8)

## சிந்துஜாவின் வழக்கு;

### இரண்டு வார கால அவகாசம்

### பொலிஸாருக்கு மன்று உத்தரவு

(மன்னார்)

மன்னார் மடு பகுதியைச் சேர்ந்த இளம் தாய் சிந்துஜா மன்னார் வைத்திய சாலையில் மரணமடைந்த நிலையில் குறித்த மரணம் தொடர்பில் சந்தேகம் இருப்பதாக உறவினர்கள் மற்றும் பெற்றோர்கள் மேற்கொண்ட முறைப்பாடுக்கு அமைவாக பொலிஸாரால் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக நம்பப்பட்டு வந்த நிலையில் விசாரணைகள் மந்த கதியில் இடம்பெற்றுள்ளமை நீதிமன்ற விசாரணையில் தெரிய வந்துள்ளது

சிந்துஜாவின் மரணம் தொடர்பிலான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் மன்னார் நீதவான் நீதி மன்றத்தில் அழைக்கப்பட்ட நிலையில் சில நாட்களுக்கு முன்பாக தான் குறித்த வழக்கு மன்னார் பிராந்திய குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மன்னார் குற்றத்தடுப்பு பொலிஸார் மன்றில் தெரிவித்திருந்தனர்.

இதுவரை காலமும் மன்னார் மடு பொலிஸார் குறித்த வழக்கு விசாரணையை B வழக்காக பதிவு செய்யாது சாதாரண வழக்காக பதிவு செய்து விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட பெண் சார்பாக நீதி மன்றத்தில் ஆஜரான சட்டத்தரணி டெனிஸ்வரன் மற்றும் சர்மிலன் டயசின் கோரிக்கையை ஏற்று குறித்த வழக்கு தொடர்பிலான விசாரணையை துரிதப்படுத்தி இரண்டு வார காலத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அதே நேரம் வழக்கை B அறிக்கையாக தாக்கல் செய்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

குறித்த வழக்கு மேலதிக விசாரணைக்காக டிசம்பர் மாதம் 3 திகதி தவணையிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-285)

## தேசியப்பட்டியல் ஊடாக வன்னி மாவட்ட பிரதிநிதித்துவம் 9 ஆக அதிகரிப்பு

(மன்னார்)

வன்னி தேர்தல் மாவட்டத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தி ஊடாக மேலும் ஒரு தேசிய பட்டியல் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைக்கப் பெற்றுள்ளது.

அந்தவகையில் பாராளுமன்ற உறுப்பினர் றிசாட் பதியூதீனின் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரசின் முக்கியஸ்தரான முஹம்மது இஸ்மாயில் முத்து முஹம்மது என்பவருக்கே குறித்த தேசியபட்டியல் வழங்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரசானது இம்முறை பொதுத்தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தனித்து போட்டியிட்டு ஒரு ஆசனத்தை பெற்றுக் கொண்டதுடன், வன்னி உட்பட ஏனைய மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து போட்டியிட்டிருந்தது. அந்தவகையில் ஐக்கிய மக்கள் சக்திக்கு கிடைக்கப் பெற்ற ஐந்து தேசிய பட்டியல் ஆசனத்தில் ஒன்று அகில இலங்கை மக்கள் காங்கிரசுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கட்சியின் நீண்டகால உறுப்பினரும் முக்கியஸ்தருமான முஹம்மது இஸ்மாயில் முத்து முகமது என்பவருக்கு குறித்த பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது.

இவரது நியமனத்துடன் வன்னிமாவட்டம் 9 பாராளுமன்ற பிரதிநித்துவங்களை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## தேவிபுரம் துயிலும் இல்லத்தில் சிரமதானப்பணி முன்னெடுப்பு



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கும் நடவடிக்கையில் பொதுமக்கள் மற்றும் ஏற்பாட்டாளர்கள் ஈடுபட்டு வருகின்றார்கள்.

அந்தவகையில் மாவட்டத்தில் தேவிபுரம் ஆ பகுதி மாவீரர் துயிலும் இல்லம் சுத்தம் செய்யும் நடவடிக்கையில் மக்கள் நேற்று ஈடுபட்டிருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 11 இற்கும் மேற்பட்ட இடங்களில் மாவீரர்களின் வித்துடல்கள் விதைக்கப்பட்டுள்ளன.

கார்த்திகை 27 இல் மாவீரர்களின் பெற்றோர்கள் உறவினர்கள் சென்று தமிழர்களின் விடிவிற்காக உயிர்நீர்த்த மாவீரர்களை நினைவிற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-8-299)

## 83 வீதமான மழைவீழ்ச்சி வவு. மாவட்டத்தில் பதிவு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் 2024 ஜனவரி தொடக்கம் நவம்பர் 19 வரை 83 வீதமான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மாவட்ட வளிமண்டல நிலையப் பொறுப்பதிகாரி தா.சதானந்தன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் ஆண்டுக்கு சராசரியாக 1200 தொடக்கம் 1400 மில்லி மீற்றர் அளவிலேயே மழை வீழ்ச்சி கிடைக்கப் பெறுகின்றது.

அந்தவகையில் வவுனியா மாவட்டத்தில் ஜனவரி முதல் நவம்பர் வரையான காலப் பகுதியில் 994.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இந்நிலையில் வருகின்ற 40 நாட்களிற்குள் 300 மில்லி மீற்றர் அளவிலான மழை வீழ்ச்சியே பதிவாகும். இனிவரும் காலப்பகுதியில் பெய்யும் மழை சாதாரண மழையாகவே காணப்படும்.

நவம்பர் இறுதி, டிசம்பர் மாதங்களில் மழை அதிகமாக காணப்பட்டாலும் சராசரி மழை வீழ்ச்சியாகவே காணப்படும் எனவும் மாவட்ட வளிமண்டல நிலைய பொறுப்பதிகாரி தா.சதானந்தன் மேலும் தெரிவித்துள்ளார். (6-8-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 636





போகிறதென்றால், சற்று முன் இந்த ஊர் வீதியில் அவன் என்னைப் பகைவர்களின் ஒற்றன் என்று சொல்லிப் பழுவேட்டரையர்களிடம் பிடித்துக் கொடுக்கப் பார்த்தான். அங்கிருந்து தப்பி வந்தால், அரண்மனை முற்றத்தில் ஆயிரம் பதினாயிரம் பேருக்கு எதிரில் என்னைப் 'பழுவூர் ராணியின் ஒற்றன்' என்று குற்றம் சாட்டினான்."

வல்லத்து இளவரசரே! அது உண்மையல்லவா?

எது உண்மையல்லவா?

"நீர் பழுவூர் ராணி நந்தினி தேவியின் ஒற்றன் என்று பினாகபாணி குற்றம் சாட்டியதைக் கேட்கிறேன். உண்மையைச் சொல்வீரா?"

நான் உண்மை சொல்லுவதில்லையென்று விரதம் வைத்துக் கொண்டிருக்கிறேன், தேவி!

"ஆகா! அது என்ன விரதம்? அரிச்சந்திர நதிக்கரையில் பழுவூர் ராணியைப் பார்த்ததிலிருந்து அப்படிப் பட்ட விரதம் எடுத்துக் கொண்டீரா?"

"இல்லை, இல்லை! அதற்கு முன்னாலேயே அந்த முடிவுக்கு வந்து விட்டேன். நான் உண்மைக்கு மாறானதைச் சொல்லிக் கொண்டிருந்த வரையில் எல்லோரும் நம்பிக் கொண்டிருந்தார்கள். ஓரிடத்தில் வாய் தவறி 'இளவரசர் நாகைப்பட்டினத்தில் பத்திரமாயிருக்கிறார்' என்று சொன்னேன். ஒருவரும் நம்பவில்லை கேட்டவர்கள் எல்லோரும் சிரித்தார்கள்."

"எவ்வளவு தவறான காரியத்தைச் செய்தீர்! உம்முடைய வார்த்தையை அவர்கள் நம்பாததே நல்லதாய்ப் போயிற்று! நம்பியிருந்தால் எவ்வளவு பிசகாகப் போயிருக்கும்?"

இனிமேல் எப்போதும் இத்தகைய தவறுகள் நேரவே நேராது. "உமது வாக்குறுதிக்கு மிக்க நன்றி!" என்ன வாக்குறுதி கொடுத்தேன்?

"இனிமேல் தவறு எதுவும் நேராமல் நான் இட்ட காரியத்தைச் செய்வதாக."

"கடவுளே! அப்படி நான் ஒன்றும் வாக்குறுதி கொடுக்கவில்லை. போதும்! என்னைச் சிறையிலிருந்து விடுதலை செய்து விடுங்கள்! என் வழியே போகிறேன்."

"அப்படியானால் உமக்கு விடுதலை கிடையாது! இந்தச் சிறையிலேயே நீர் இருந்து வரவேண்டியதுதான்" என்றாள். வந்தியத்தேவன் கலகல வென்று சிரித்தான். "நீர் எதற்காகச் சிரிக்கிறீர்? நான் சொல்வது வேடிக்கை என்றா?"

"இல்லை, தேவி! இந்தச் சிறையிலிருந்து தாங்கள் என்னை விடுதலை செய்யாவிட்டால், நான் இதிலிருந்து தப்பிச் செல்ல முடியாதா?"

இளவரசி ஒரு கணம் வந்தியத்தேவனைத் தன் மலர்ந்த கண்களினால் உற்றுப் பார்த்துவிட்டு, "ஐயா, நீர் கெட்டிக்காரரர் அதிலும் சிறையிலிருந்து தப்பிச் செல்வதில் மிகக் கெட்டிக்காரர்.

(தொடரும்)

என் கோபத்தையெல்லாம் அந்த வைத்தியர் மகனைக் கொன்று தீர்த்துக் கொள்ளலாம் என்று பார்த்தேன். அதற்கும் ஒரு தடை வந்து குறுக்கிட்டு விட்டது.

ஐயா! வைத்தியர் மகன் பினாகபாணி மீது உமக்கு ஏன் அவ்வளவு கோபம்?

"கோபத்துக்கு வேண்டிய காரணம் இருக்கிறது. நல்ல ஆளைப் பிடித்து என்னோடு கோடிக்கரைக்கு அனுப்பினீர்கள். அவன் என் காரியத்தையே கெடுத்து விட இருந்தான். அது



# சிறுவர் அரங்கம்

## பெரிய மரத்திலிருக்கும் சிறிய பழம்



ஒரு நாள் முல்லா மல் பெரிய மரத்தின் நிழலில் அமர்ந்து களைப்பாறிக் கொண்டிருக்கையில் அந்த வழி வந்த ஒரு இளைஞன் அதே மரத்தின் அடியில் களைப்பாறுவதற்காக வந்தான்.

மரத்தின் வேர்களின் மீது தலை வைத்து படுத்து சற்று நேரம் களைப் பாறினான். அவன் பார்வை முல்லாவின் மீது விழுந்தது. பிறகு அண்ணாந்து பார்த்தவன் மரத்தில் இருந்த சின்னஞ்சிறு பழங்களை பார்த்தவுடன் சத்தமாகச் சிரித்தான்.

முல்லா அவனிடம் ஏன் சிரிக்கிறீர்? என்று கேட்டார்.

கடவுளின் முட்டாள் தனத்தை எண்ணி சிரிக்கிறேன் என்றான். கடவுள் அப்படி என்ன முட்டாள் தனம் செய்தார் என்றார்.

இந்த மரத்தை இவ்வளவு பெரிதாக படைத்தவன் இந்த மரத்தின் பழங்களை மட்டும் மிகச் சிறியதாக படைத்த கடவுளின் முட்டாள் தனத்தை நினைத்தேன், சிரித்தேன் என்றான். முல்லா பதில் ஒன்றும் பேசாமல் வாயை மூடிக் கொண்டார்.

சிறிது நேரம் கழித்து காற்று பலமாக அடிக்க மரக்கிளைகளில் இருந்த சின்னஞ் சிறு பழங்கள் [illegible]ந்து கொ[illegible] தொடங்கின. சில பழங்கள் அந்த இளைஞனின் தலையின் மேலும் விழுந்தது. முல்லா அவனைப் பார்த்து நண்பரே உமது தலைமீது ஏராளமான பழங்கள் விழுந்திருக்கும் போலிருக்கிறதே? என்று கேட்டார். ஆமாம் காற்றில் அவை உதிர்ந்து விட்டன என்றான் வழிப்போக்கன்.

கடவுள் புத்திசாலித்தனமாக இந்த மரத்தில் பெரிய பழங்களை உற்பத்தி செய்திருந்தாரானால், உமது தலை என்ன ஆகியிருக்கும் என்று நினைத்துப்பாருங்கள் என்றார் முல்லா. வழிப் போக்கனான அந்த [illegible]தார்.

நண்பரே, எதையும் ஒரு காரணத்தோடு தான் இறைவன் உருவாக்கியிருப்பார். இவ்வளவு பெரிய மரத்தினுடைய கிளைகளின் நிழலில் மனிதர்களும் விலங்குகளும் களைப் பாறுவதற்கு வந்து தங்குவார்கள் என்பதை முன் கூட்டியே அறிந்த கடவுள் நிழல் தரும் பெரிய மரத்தின் பழங்களை மிகவும் சிறியனவாகப் படைத்திருக்கிறார் என்றார் முல்லா.

இந்த மரத்தின் பழங்களை மட்டும் பெரிதாக படைத்திருந்தால் தன் நிலைமை என்னவாகியிருக்கும் என்பதை எண்ணி, மறுகணம் மனதிற்குள் கடவுளிடம் மன்னிப்புக் கேட்டான்.

தனக்கு புரிய வைத்த முல்லாவை பார்த்து, தங்களை பார்க்க ஒரு மகான் போல் காட்சியளிக்கிறீரே? தாங்கள் யார் என்று கேட்டான். நானும் உம்மைப்போல ஒரு மனிதன் தான் என்றார் முல்லா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறர் எப்படி நடந்து கொண்டாலும், தான் தனது பண்புகளின் படி உண்மையாய் இருப்பதே நேர்மையின் அடையாளமாகும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வடக்கு மாகாண ஆளுநருக்கு ஓர் அவசர மடல்

வடக்கு மாகாண ஆளுநருக்கு அன்பு வணக்கம். நடந்து முடிந்த பொதுத் தேர்தல் முடிவுகள் வட மாகாணத்தில் எவ்வாறாக அமைந்துள்ளதென்பதை நிச்சயம் நீங்கள் சீர்தூக்கி ஆராய்ந்திருப்பீர்கள். அந்த ஆராய்வில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் ஆட்சிக்கு தமிழ் மக்கள் தங்களின் ஆதரவைத் தெரிவித்துள்ளனர் என்பது தெரியவரும்.

அதாவது தேசிய மக்கள் சக்தியின் சார்பில் வட மாகாணத்தில் ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

எனினும் வட மாகாணத்தில் மக்களின் பிரச்சினைகளை இவர்கள் ஜனாதிபதி அநுரவின் கவனத்துக்குக்கொண்டு வந்து தீர்வு காணுவார்கள் என்பது உடனடிச் சாத்தியமன்று.

அதற்குப் பல காரணங்கள் உண்டு. குறிப்பாக, வட மாகாணத்தில் இருந்து தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்டு பாராளுமன்றம் சென்ற உறுப்பினர்களுக்கு இது புது அனுபவம். தவிர ஒரே கட்சியில் இருந்து கொண்டு ஜனாதிபதி அநுரவிடமோ அன்றி அமைச்சர்களிடமோ கோரிக்கைகளை முன் வைத்து பாராளுமன்றத்தில் அவர்களால் உரையாற்ற முடியாது.

மாறாக, அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கத்தின் 159 பாராளுமன்ற உறுப்பினர் பட்டியலில் இவர்களும் உள்ளடக்கமே யன்றி மற்றும்படி அவர்களால் தமிழ் மக்களின் பிரச்சினையை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வருவது கடினமே.

தவிர, வடக்கில் இருந்து தெரிவு செய்யப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள்; எதிர்க்கட்சி வரிசையில் இருக்கக்கூடிய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றில் ஏதேனும் உரையாற்றினால், அதை எதிர்த்து உரையாற்றலாமேயன்றி வேறு எதுவும் நடந்தாகாது.

எனவே ஜனாதிபதி அநுரவினால் நியமிக்கப்பட்ட வடக்கின் ஆளுநராகிய தாங்களே எமது பிரதேசத்திலுள்ள பிரச்சினைகளை ஜனாதிபதி அநுரவின் கவனத்துக்குக் கொண்டு வர வேண்டும்.

ஆம், நாடு முழுவதையும் காபற் வீதிகள் அழகுபடுத்தி நிற்க, மழை காலங்களில் வெள்ளம் வடிந்தோடி மழைத் தண்ணீர் தேங்குகின்ற நிலைமை இல்லாதிருக்க, எங்கள் பிரதேசத்தில் யாழ்ப்பாணம் பிரதம தபால் நிலையத்துக்கு முன்பான வீதியில் – யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு முன்பான காரை நகர் வீதியில் – யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியும் அரசடி வீதியும் இணைகின்ற சந்தியில் பெரு வெள்ளமாக மழை நீர் தேங்கி நிற்பது சீனத்துப் பெருந்துயர் போல உள்ளது.

எனவே வட மாகாணம் முழுமையிலும் உங்கள் களத் தரிசிப்பு நடக்கட்டும். அலுவலகங்கள், வைத்தியசாலைகள் என எங்கும் நீங்கள் சென்று குறைகளைக் கேட்டறிந்து நிவர்த்திக்க வேண்டும்.

நம் ஊர்களில் படையினர் ஆக்கிரமித்துள்ள நிலங்களை ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்து, அவற்றை விடுவிக்க வேண்டும். இது போல எம் மக்களின் அடிப்படை பிரச்சினைகளை தீர்த்து வைக்க தாங்கள் விரைவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

# இனப்பிரச்சினைக்கான தீர்வு மூலமே அரசியல் மாற்றத்தை அனுபவிக்க முடியும்

### ஜனாதிபதிக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் வி.கே.ஜெகன்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் நன் மதிப்பைப் பெற்றுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தமிழ் மக்களின் இனப் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கண்டு அவர்களின் நம்பிக்கையை மேலும் வலுப்படுத்த வேண்டும்.

இவ்வாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே. வி. குகேந்திரன் (வி.கே.ஜெகன்) ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு அனுப்பி வைத்த வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பிவைத்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கை அரசியலில் ஏற்பட்ட மாற்றத்தை தமிழ் மக்களும் ஏற்றுள்ளனர்.

இந்த நாட்டில் நீண்டகாலமாக நீடித்து வரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது மிகவும் அவசியமானது.

உண்மையில் அரசியல் மாற்றத்தை இனப் பிரச்சினைக்கான தீர்வு மூலமே மக்கள் அனுபவிக்க முடியும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# பேருந்தில் வருகைதந்த பாராளுமன்ற உறுப்பினர்கள்

(கொழும்பு)

ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தியின் 50 இற்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் புதன்கிழமை பாராளுமன்றத்துக்கு பிரத்தியேக பேருந்தில் வருகை தந்து தகவல்களைப் பதிவு செய்தனர்.

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று புதன்கிழமை (20) பத்தரமுல்லைப் பகுதியில் மக்கள் விடுதலை முன்னணியின் காரியாலயத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இதன்போது பாராளுமன்றத்தில் நடந்து கொள்ளும் முறைமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாரிய எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்கள்.

ஆகவே மக்களின் நம்பிக்கையைச் சீர்குலைக்கும் வகையிலும், மக்களால் வெறுக்கப்படும் வகையிலும் எந்நிலையிலும் செயற்பட வேண்டாம் என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா ஆலோசனை வழங்கியுள்ளார். (ம-7)

# மண்மேடு விழுந்ததில் மாணவன் உயிரிழப்பு

(கண்டி)

கண்டி - தெல்தெனிய, தன்னலந்த பகுதியில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து விழுந்ததில் பாடசாலை மாணவன் ஒருவன் உயிரிழந்தான்.

இச் சம்பவம் நேற்று (20) காலை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 16 வயதுடைய மாணவன் ஒருவரே உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மண்மேடு சரிந்ததில் வீடு முற்றாக நீரில் மூழ்கியுள்ளது.

கண்டி அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் மண்மேட்டை அகற்றும் பணியை ஆரம்பித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

# தேசியப் பட்டியல் உறுப்பினராக ரவி கருணாநாயக்க

### விசாரணைக்கு 4 பேர் கொண்ட குழு நியமனம்

(கொழும்பு)

புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் உறுப்பினராக ரவி கருணாநாயக்கவை நியமித்தமை தொடர்பில் சுயாதீன விசாரணைகளை மேற்கொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நான்கு பேர் கொண்ட குழுவொன்றை நியமித்துள்ளார்.

அந்தக் குழுவின் உறுப்பினர்களாக, சட்டத்தரணி குமார் துனுசிங்க, சட்டத்தரணி இந்திக்க வேரகொட மற்றும் டாக்டர் விதானகே ஆகியோர் அடங்குவதுடன், குழுவின் செயலாளர் - சட்டத்தரணி யசஸ் டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த ஆய்வு அறிக்கையை 3 வாரங்களுக்குள் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கத் தீர்மானிக்கப்பட்டதுடன், பின்னர் ஐ.தே.க செயற் குழுவில் அறிக்கையை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# குருநாகலில் விபத்து ஒருவர் உயிரிழப்பு

(குருநாகல்)

குருநாகல் - ஹிரிபிட்டிய வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மூவர் காயமடைந்துள்ளனர்.

குறித்த விபத்து நேற்று புதன்கிழமை (20) பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த லொறியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்துக்குள்ளான காரின் சாரதி மது போதையில் இருந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

விபத்தின் போது காரில் பயணித்த மூவரும் லொறியின் சாரதியும் காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் காரில் பயணித்த நபரொருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-7)

# குருநகரில் வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்ததால்

### பொது மக்கள் அசௌகரியம்

யாழ்ப்பாணம் - குருநகர் தொடர்மாடிக்கு அருகாமையில் உள்ள வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்ததால் மக்கள் மிகுந்த அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

அண்ணளவாக 60 வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளதால் அங்கு வசிக்கும் மக்கள் தங்கள் உறவினர்களது வீடுகளுக்கு இடம்பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. வெள்ள நீர் வடிந்தோடிக் கொண்டிருக்கிறது.

இருப்பினும், வெள்ளம் புகுந்த பல வீடுகளில் மக்கள் வசிக்க முடியாத நிலையே காணப்படுகிறது. (ம-7)

# வவுனியாவில் பெண் சுட்டுப் படுகொலை

### சந்தேகத்தில் இளைஞன் கைது

வவுனியா ஈச்சங்குளம் பிரதேசத்தில் பெண் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இளைஞன் ஒருவன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (19) பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளதாக ஈச்சங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் கடந்த 03 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

ஈச்சங்குளம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் சுற்றிவளைப்பில் சந்தேக நபர் வவுனியா, சுந்தரபுரம் பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் வவுனியா சுந்தரபுரம் பிரதேசத்தில் வசிக்கும் 27 வயதுடைய இளைஞன் ஆவான்.

சந்தேக நபரிடமிருந்து உள்நாட்டுத் துப்பாக்கி ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஈச்சங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின் சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,250)

**வடமாகாண மரநடுகை மாதம்**

**கார்த்திகை 01 - 30, 2024**

**"நாகரிகத்தின் வேர் காடுகள் தான். கூட்டங்களில் இருந்து விலகியிருந்து மரங்களுடன், ஆறுகளுடன், ஏரிகளுடன் ஒன்றாய்க் கலந்திருந்த மனிதர்களிடம் இருந்து தான் தலை சிறந்த கருத்துக்கள் வந்துள்ளன. காடுகளின் அமைதி மனிதனின் அறிவாற்றல் பெருக உதவியுள்ளது."**

இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் விசேட சோதனை

(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நுகர்வோர் விவகார அதிகார சபையினால் நாடளாவிய ரீதியில் விசேட சோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதற்கமைய எதிர்வரும் 25ஆம் திகதி முதல் அடுத்த வருடம் ஜனவரி 15ஆம் திகதி வரையில் குறித்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்போது பிரதான மொத்த விற்பனை நிலையங்கள் மற்றும் களஞ்சியசாலை என்பவற்றை சோதனையிட்டு காலாவதியான மற்றும் விபரங்கள் திரிபுபடுத்தப்பட்ட பொருட்கள் சந்தைக்கு விடுவிக்கப்படுவதைத் தடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் குறித்த காலப் பகுதியினுள் சிறப்பங்காடிகள் உள்ளிட்ட சில்லறை விற்பனை நிலையங்கள், மலிவு விற் பனை நிலையங்கள் மற்றும் நடமாடும் வர்த்தகங்கள் குறித்தும் கூடுதல் அவதானம் செலுத்தப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (நி-8)

# அதிக பணம் அறவிட்டால் 1955 இற்கு முறையிடலாம்

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

(கொழும்பு)

பேருந்து கட்டணத்திற்குப் பதிலாக அதிக பணம் அறவிடப்பட்டால் முறைப்பாடு செய்ய முடியும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மக்களுக்கு அறிவித்துள்ளது.

1955 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு முறைப்பாடு செய்ய முடியும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்பு - கோட்டையில் இருந்து கெக்கிராவ நோக்கி பயணித்த பயணி ஒருவரிடம் கப்பம் பெற்ற சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் பதிவாகியிருந்தது.

இந்நிலையில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மக்களுக்கு இதனை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>1 இல் சூரி செவ்<br>கி.பா: 73 ½<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Bsc,Canada<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு (only canada), படித்தவர்<br>தொ.இ: B/14924 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 49<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BBA, Accounting Associate (pvt)<br>எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம், பட்டதாரி<br>தொ.இ: G/14948 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:Bsc,Teacher<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச தொழில்<br>தொ.இ: B/14926 | பிறப்பு: 2003 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:ஆசிரியர் (pvt)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/14951 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா:53<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: HNDE, Own Business<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14927 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்:புனர்பூசம்<br>கிபா: 14 ½<br>5 இல் சூரி செவ்<br>உயரம்: 5'3"<br>தகைமை:தொழில்: Bsc, Computer Engineer(Canada)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு(கனடா)<br>தொ.இ: G/14952 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3264

கஷ்மினா




விநுசியா




அசானி




மாதுளன்




பிரதீஷ்




மதுரா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணில்...

கின்றார்.

மத்திய இந்தியாவின் இந்தூரில் உள்ள ஸ்ரீ சத்ய ஸ்ரீ வித்யா விஹார் உயர்கல்வி நிறுவனத்தில் விரிவுரை ஒன்றில் கலந்து கொள்வதற்காக அவர் அங்கு செல்கின்றார்.

குறித்த விரிவுரை நாளை மாலை 06.00 மணிக்கு இடம்பெறவுள்ளதுடன் முன்னாள் ஜனாதிபதி எதிர்வரும் 30 ஆம் திகதி நாடு திரும்பவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மோ.சைக்கிள்...

சைக்கிள் இரண்டு மோதியதில் இரு இளைஞர்கள் சம்பவ இடத்தில் உயிரிழந்ததோடு ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த விபத்து நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் மாங்குளம் பகுதியில் வசிக்கும் விஜயகுமார் விதுசன் (வயது-20), ஜெயகுமார் விதுசன் (வயது-23) ஆகிய இரு இளைஞர்களே உயிரிழந்துள்ளனர். மரியதாஸ் சுவாமிகீர்த்தி (வயது-31) எனும் இளைஞர் படுகாயமடைந்துள்ளார்.

முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் இருந்து மல்லாவி நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் மல்லாவியில் இருந்து மாங்குளம் நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளும் வேகக்கட்டுப் பாட்டை இழந்து மாங்குளம் வன்னி விளாங்குளம் ஐந்தாவது மைல் கல் பகுதியில் மோதியதில் குறித்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ம-7,299)

## யாழில்...

அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட J/315 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இருவரும், J/328 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இரண்டு வீடுகள் சேதமடைந்துள்ளன.

அத்துடன் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட J/56 கிராம சேவகர் பிரிவில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 8 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மூன்று குடும்பங்களைச் சேர்ந்த ஆறு பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு வீடுகள் சேதமடைந்துள்ளன. J/403 கிராம சேவகர் பிரிவில் 7 குடும்பங்களைச் சேர்ந்த 29 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 6 வீடுகள் சேதமடைந்துள்ளன.

அத்துடன் நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட J/91 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## 34 வருடங்களின்...

பலாலி வடக்கு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம் 34 வருடங்களின் பின்னர் மக்களின் வழிபாட்டுக்கு நேற்று முதல் தினசரி செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள இந்த ஆலயம் உட்பட 6 ஆலயங்களுக்கு வெள்ளிக்கிழமைகளில் செல்ல அனுமதிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று முதல் பலாலி வடக்கு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்துக்கு தினசரி செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்துக்கு செல்பவர்கள் ஏற்கெனவே சென்று வந்த பாதையூடாக செல்ல முடியும். (ம-7,33)

## பிரசவத்தில்...

துக்கு நீதி கோரி மன்னார் பொது வைத்தியசாலைக்கு முன்பாக கொட்டும் மழைக்கும் மத்தியிலும் நேற்று மாலை கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

தாயின் மரணத்துக்கு நீதி வழங்க வேண்டும், தவறு செய்தவர்கள் கைது செய்யப்படவேண்டும், வைத்தியசாலை நிர்வாகம் மாற்றப்படவேண்டும் போன்ற பலவேறு கோரிக்கைகளை முன்வைத்து அமைதியான முறையில் போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தின்போது பல்வேறு கோஷங்கள் எழுப்பப்பட்ட நிலையில் வைத்தியசாலைக்குள் போராட்டக்காரர்கள் நுழைய முற்பட்டதால் பதற்றம் ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து பொலிஸாருக்கும் மக்களுக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டது. இதன் காரணமாக கலகம் அடக்கும் பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் வரவழைக்கப்பட்டனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த மாவட்ட அரசாங்க அதிபர், வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், விசாரணைக்குழுவின் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள், உயிரிழந்த பெண்ணின் தாய் மற்றும் உறவினர்களுடன் சமரசப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

சுமார் இரண்டு மணித்தியாலத்துக்கு மேலாக இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் இரு மரணங்களுக்கும் உரிய தீர்வு கிடைக்கும் என்று மாகாணப் பணிப்பாளர் எழுத்துமூல உறுதிமொழியை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து இரவு 8.30 மணியளவில் அமைதி வழிப்போராட்டம் நிறைவுற்றது. (ம-7,285)

## வட...

ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனிடம் இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் நேற்று புதன் கிழமை கையளித்தார்.

வடக்குமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனை, வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்றுக் காலை இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் தலைமையிலான குழுவினர் சந்தித்தனர். இதன் போதே அவர் இந்தக் காசோலையைக் கையளித்தார்.

வட மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்ட நாகலிங்கம் வேதநாயகனுக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்த இலங்கைக்கான சீனத் தூதுவர், இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு தமது பங்களிப்பு இருக்கும் என்று உறுதியளித்தார். வடபகுதியில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை அவதானிக்கையில் சந்தோசமாக இருப்பதாக சீனத் தூதுவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கான சீனத் தூதுவரை வரவேற்ற வடக்கு மாகாண ஆளுநர், [illegible] நாட்டில் ஊழல் ஒழிப்பு, அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

வடபகுதி விவசாயிகளின் நீண்ட காலப் பிரச்சினையாக அவர்களின் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்குரிய வாய்ப்புக்கள் குறைவாக உள்ளன என்பதை ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

மேலும், வடக்கு மாகாணத்தின் மற்றொரு முக்கிய வளமான மீன்பிடி மூலமாக பிடிக்கப்படும் மீன்கள் அப்படியே ஏற்றுமதி செய்யப்படுகின்றன எனவும் அவை உற்பத்திப் பொருட்களாக ஏற்றுமதி செய்யப்பட வேண்டியதன் அவசியத்தையும் ஆளுநர் குறிப்பிட்டார். (ம-7,33)

## சுவிட்சர்லாந்தில்...

தினம் அதிகாலை 4.30 மணியளவில் பார ஊர்தியுடன் அதிவேகமாகக் கார் மோதிய விபத்தில் இத்துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கேசவன் (வயது-27) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார். (ம-7)






























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

வாகன சாரதி : AD அனுமதிப் பத்திரம் உள்ள சாரதிகள் தேவை.(வயது 40 - 55)

களஞ்சியப் பொறுப்பாளர் : கணனி அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

வயது : 35 - 50

திருநெல்வேலி, கோண்டாவில், கொக்குவில், கோப்பாய் அண்மித்த பகுதிகளிலுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புக்கு : 076 3280 381

(2469)



## மாப்பிள்ளை தேவை

01. புங்குடுதீவு, இந்து, 1996, விசாகம், MSc, UK பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
02. நீர்வேலி - தாவடி , இந்து, 1993, பூராடம், Charted Management, கனடா பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
03. ஊரெழு - கொக்குவில் , இந்து, 1985, பூரட்டாதி, Bachelor Accountant, Australia பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
04. வேலணை, இந்து, 1993, மகம், LLB Lawyer, UK பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
05. வட்டுக்கோட்டை, இந்து, 1984, புனர்பூசம், Business Management, UK Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
06. ஆனைக்கோட்டை - நல்லூர், இந்து, 1995, ரோகினி, Graduate, Norway Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
07. திருநெல்வேலி, இந்து, 1997, கார்த்திகை, Phd, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
08. உரும்பிராய், இந்து, 1993, திருவோணம், BSc Masters, கனடா பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
09. வேலணை - புங்குடுதீவு, இந்து, 1992, பூசம், ACCA, Accountant, UK பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

எம்மிடம் எல்லா ஜாதியிலும், வெளிநாட்டு, உள்நாட்டு Divorce, Unmarried, மணப்பெண்களும் மாப்பிள்ளைகளும் உண்டு.

S.Sharma J.P
www.thaalee.com
- 077 539 3728
- 077 803 8193

(2474)


# ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்புக்கு பின் மதுச்சாலைகளுக்கு அனுமதி

## உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல்

கடந்த ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர், சட்டத்துக்கு முரணாக மதுபான சாலை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதன் மூலம் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகத் தீர்ப்பளிக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கண்டியில் மதுபான வர்த்தகத்தில் ஈடுபட்டுவரும் இருவர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக முன்னாள் ஜனாதிபதியும் நிதியமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் மதுவரி ஆணையாளர் நாயகம் எம். ஜே. குணசிறி, நிதியமைச்சின் செயலாளர் உள்ளிட்ட 39 பேர் பெயரிடப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட ஜூலை 26ஆம் திகதிக்கும், தேர்தல் நடைபெற்ற செப்ரெம்பர் 21ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில், பிரதிவாதிகள் சட்டவிரோதமாகப் பல மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களை வழங்கியதாக மனுதாரர்கள் குறிப்பிடுகின்றனர். (ம-7)

# குழந்தைகளைக் கைவிட்டு சென்ற குடும்பப் பெண்

## சாவகச்சேரியில் கைது

பத்து வயதிற்கு உட்பட்ட மூன்று குழந்தைகளையும்-கணவனையும் கைவிட்டு விட்டு வேறொரு ஆணுடன் சென்ற 29 வயதான பெண் ஒருவரை சாவகச்சேரிப் பொலிஸார் நேற்று புதன்கிழமை காலை கைது செய்துள்ளனர்.

நாவற்குழியைச் சேர்ந்த மேற்படி பெண் தனது 4 வயது, 6 வயது மற்றும் 10 வயதுடைய மூன்று பிள்ளைகளை கைவிட்டு விட்டு வேறொரு ஆணுடன் சென்றிருந்த நிலையில் பெண்ணுடைய கணவன் சாவகச்சேரிப் பொலிஸில் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்படி கைது நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

மேற்படி பெண் மூன்று பிள்ளைகளின் தந்தையான ஆண் ஒருவருடன் கீரிமலைப் பகுதியில் வசித்து வந்த நிலையிலேயே பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,30)


## மொத்தக் கொள்வனவு

அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கு பலசரக்குப் பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள்.

ஹப்பி சூப்பர்மாக்கட்
உரும்பிராய்
077 780 8030
48/=
80/=
(562)



V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1626)


# மரண அறிவித்தல்

# அழகசுந்தரம் கிருபாகரன்

## (கிருபா சாரதி பயிற்சிப் பாடசாலை பிரபல தொழிலதிபர்)



மலர்வு 1980.06.03

உதிர்வு 2024.11.19

பதுளை மாவட்டத்தைப் பிறப்பிடமாகவும் ஆசீர்வாதப்பர் வீதி, கச்சேரி, நல்லூர், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அழகசுந்தரம் கிருபாகரன் அவர்கள் 19.11.2024 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.11.2024 நாளை வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் காலை 8.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தகவல் :*
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.11.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.